வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 18.12.2024 புதன்கிழமை இதழ் : 352 பக்கங்கள் : 12

கொரோனா தொற்று காலத்தில்

# முஸ்லிம்களின் உடல்களை தகனம் செய்தோருக்கு எதிராக நடவடிக்கை

## சபையில் நேற்று அரசு உறுதி

கொழும்பு, டிசெம்பர் 18

**கோவிட் தொற்றினால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை தகனம் செய்யும் தீர்மானத்தை மேற்கொண்ட நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என அர சாங்கம் உறுதியளித்துள்ளது.**

பாராளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. இந்த விடயம் தொடர்பில் கேள்வி எழுப்பினார்.

கொரோனா காலத்தில் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் அரசாங்கத்தின் நடவடிக்கை என்னவென அவர் வினவினார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் ஹரிணி அமரசூரிய, கடந்த அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட குரூரமான தீர்மானம் அதுவென சுட்டிக்காட்டினார். தற்போதைய அரசாங்கத்தில் அவ்வாறான செயற்பாடுகளுக்கு எந்த வகையிலும் இடமளிக்கப்படமாட்டாது என அவர் 11



# புதிய சபாநாயகராக ஜகத் விக்கிரமரத்ன!

கொழும்பு, டிசெ. 18

பொலனறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விக்கிரமரத்ன புதிய சபாநாயராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பிரதமர் ஹரிணி, அவரின் பெயரை முன்மொழிய சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க அதனை வழிமொழிந்தார்.

பாராளுமன்றம் நேற்று காலை 9.30 மணிக்கு 11

# எலிக்காய்ச்சல் தொற்றால் இதுவரை யாழ். மாவட்டத்தில் 99 பேர் பாதிப்பு!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம்,டிசெ. 18

யாழ்.மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் நோய் காரணமாக இதுவரை 99 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 23 பேரும் யாழ் போதனா வைத்தியசாலையில் 6 பேரும் சிகிச்சைபெற்று வருகின்றனர் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் 11



# எம்.பி. பதவியிலிருந்து அர்ச்சுனாவை நீக்குமாறு கோரி நீதிமன்றத்தில் மனு!

கொழும்பு, டிசெ. 18

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் அர்ச்சுனா இராமநாதனை பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யக்கோரி அவருக்கு எதிரான விண்ணப்பம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா தனது வைத்திய அதிகாரி பதவியை இராஜினாமா செய்யாததால் பாராளுமன்ற உறுப்பினராக இருக்க தகுதியற்றவர் என ஓஷல ஹேரத் என்பவர் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இந்த விவகாரம் நேற்று செவ்வாய்க்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. மனுவினை எதிர்வரும் ஜனவரி 15 ஆம் திகதிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ள திகதியிட்டுள்ளது.

(அ)

# இரட்டை நிலைப்பாட்டில் தேசிய மக்கள் சக்தி அரசு!

## அநுரவின் இந்தியப் பயணம் குறித்து பொதுஜன பெரமுன கடும் விமர்சனம்

கொழும்பு, டிசெ. 18

ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் பொருட்டு இராஜதந்திர ரீதியில் இரட்டை நிலைப்பாட்டை தேசிய மக்கள் சக்தி வெளிப்படுத்தியுள்ளதாக களுத்துறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் 11

# புதிய எம்.பிக்கள் பதவிப்பிரமாணம்

கொழும்பு, டிசெ. 18

புதிய ஜனநாயக முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியலில் தெரிவான புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதி சபாநயகர் முன்னிலையில் நேற்று பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

பிரதி சபாநாயகர் மொஹமட் 11

# தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் மீண்டும் நாட்டுக்குத் திரும்பவேண்டும்!

## வடக்கு மாகாண ஆளுநர் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 18

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கையைச் சேர்ந்த அகதிகள் மீளவும் நாட்டுக்கு வரவேண்டும் என்பதே எங்களின் விருப்பமாகவும் இருக்கின்றது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் தேசிய அலுவலகத் 11



பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைதான

# பிரித்தானிய தமிழர் நீதிமன்றால் விடுதலை!

கொழும்பு, டிசெ. 18

கடந்த 30 ஆம் திகதி பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பிரித்தானிய பிரஜை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார். கைதானவர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தார்.

உலகத்தமிழ் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் மற்றும் உலகத்தமிழர் பேரவையின் நிர்வாகிகளுடன் இணைந்து பிரித்தானிய பிரஜையான சங்கர் தமிழீழ விடுதலை புலிகளின் மீள் உருவாக்கத்திற்காக நிதி திரட்டி இலங்கைக்கு அனுப்பியதாக 11

# முள்ளிவாய்க்கால் பேரவல சாட்சியாக நினைவிடம் அமைக்கப்பட வேண்டும்!

## சபையில் ரவிகரன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, டிசெ. 18

முள்ளிவாய்க்காலில் இடம் பெற்ற பேரவலத்தைப் பிரதிபலிக்கும் வகையில், அங்கு நினைவாலயம் ஒன்றை கட்டமைக்க அரசாங்கம் அனுமதி வழங்கவேண்டும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சர்வதேச இறையாண்மை பிணைமுறி மறுசீரமைப்பு தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2009ஆம் ஆண்டு இறுதிப் போரில் இலட்சக்கணக்கான தமிழ் உறவுகள் பலியான அந்த வேதனை இன்னும் ஆறவில்லை. அப்போரின் துயரத்தால் 11

# அநுரவுக்கு ரணில் பாராட்டு!

கொழும்பு, டிசெ. 18

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இருநாட்டு அரச தலைவர்களும் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரக் கட்டணத்தை 11 வீதத்தால் குறைக்கலாம்

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

கொழும்பு, டிசெ. 18

தற்போதைய நிலைமைகளின் அடிப்படையில் 11 வீதத்தால் மின் கட்டணத்தைக் குறைக்க முடியும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின்னுற்பத்திக்காக பயன்படுத்தப்படும் எரிபொருளின் விலைகளையும் மேலும் குறைக்க முடியும் என ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்டுள்ள மாற்று யோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மின் கட்டணத் திருத்தம் தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ள மாற்று யோசனைகள் குறித்த பொது மக்களின் கருத்துகளை கேட்டறியும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையால் சமர்ப்பிக்கப்பட்ட மின் கட்டணத் திருத்த யோசனை, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் மின்னுற்பத்திக்காக வழங்கப்படும் எரிபொருளுக்கான விலை தொடர்பான அறிக்கை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்த பின்னர் குறித்த மாற்று யோசனை தயாரிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 08ஆம் திகதி வரை எழுத்துமூலமான கருத்துகள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளதுடன், மாகாண மட்டத்தில் 9 அமர்வுகள் மூலம் வாய்மொழி கருத்துகள் பெறப்படவுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த முன்மொழிவு தொடர்பான எழுத்துபூர்வ யோசனைகளை info@pucsl.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப முடியும்.

076 427 10 30 என்ற வட்ஸ் அப் இலக்கத்திற்கும் பொதுமக்கள் தமது யோசனைகளை முன்வைக்க முடியும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு தபால் மூலமாகவும் முன்மொழிவுகளை சமர்ப்பிக்க முடியும்.

எவ்வாறாயினும், 2025ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களுக்கு தற்போதுள்ள மின் கட்டணத்தை மாற்றமின்றி நடைமுறைப்படுத்த மின்சார சபை தற்போது முன்மொழிந்துள்ளது. (அ)

# கிளிநொச்சியில் யுவதி கடத்தல்!

## விசாரணைகள் தீவிரம்

கிளிநொச்சி, டிசெ. 18

இரணைமடுச் சந்தி, கனகாம்பிகைக்குளம் வீதியில் வைத்து அடையாளம் தெரியாத நபர்களால் 26 வயதுடைய இளம் பெண்ணொருவர் கடத்தப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனகாம்பிகைக்குளம் முன்பாக நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

புன்னாலைக்கட்டுவான் பகுதியைச் சேர்ந்த குறித்த யுவதி, அழகுக்கலை நிலையம் ஒன்றில் பயிற்சி பெற்று வரும் நிலையில் கனகாம்பிகைக்குளம் பகுதியில் உள்ள வாடகை வீடொன்றில் வசித்து வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வழமை போன்று குறித்த யுவதி தனது வீட்டுக்கு திரும்பும்வேளை வான் ஒன்றில் வந்த மர்ம நபர்கள் அவரைக் கடத்திச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சரத் சமரவிக்ரம தலைமையிலான குழுவினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# 26 இலட்சம் ரூபா நிதி மோசடி; யாழில் வர்த்தகர் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 18

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் 26 இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இவர் யாழ்ப்பாணத்தில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் பிரதான வர்த்தகர் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை அவரை இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ)

# அரசாங்கத்தின் அரிசி இறக்குமதியில் தாமதம்

கொழும்பு, டிசெ. 18

அரசாங்கத்தின் அரிசி இறக்குமதியில் கால தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்படும் அரிசி எப்பொழுது நாட்டை வந்தடையும் என்பதனை உறுதியாகக் கூற முடியாது என விவசாய மற்றும் கால்நடைவள பிரதி அமைச்சர் நாமல் கருணாரட்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தனியார்துறையினர் இறக்குமதி செய்த அரிசி தொகைகள் ஓரளவு நாட்டுக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்படும் அரிசி தொகை எப்பொழுது நாட்டை வந்தடையும் என்ற கேள்விக்கு வர்த்தக விவகார அமைச்சே பதிலளிக்கவேண்டுமென அவர் தெரிவித்தார்.

நாட்டில் நிலவிய அரிசி தட்டுப்பாட்டுப் பிரச்னைக்கு ஜனாதிபதி நேரடியாக தலையீடு செய்திருந்தார் என அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் தலையீட்டைத் தொடர்ந்து அரிசி தட்டுப்பாட்டுப் பிரச்னை ஓரளவு தீர்க்கப்பட்டுள்ளதாகவும் சந்தைக்கு தற்போதுள்ள அரிசி விநியோகம் செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# உள்நாட்டுத் துப்பாக்கிகளுடன் வவுனியாவில் மூன்று பேர் கைது!

வவுனியா, டிசெ. 18

வவுனியா - புளியங்குளம் பகுதியில் உள்நாட்டுத் துப்பாக்கிகளுடன் மூன்று சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

புளியங்குளம் பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட மூன்று சுற்றிவளைப்புக்களின்போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 18, 19 மற்றும் 24 வயதுடையவர்கள் ஆவர்.

சந்தேக நபர்களிடம் இருந்து 03 உள்நாட்டுத் துப்பாக்கிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. (அ)

# பிரபஞ்ச நல மகாதவ வேள்வி

யாழ்ப்பாணம், டிசெ. 18

தென்னிந்தியாவின் திருமூர்த்திமலையில் அமைந்துள்ள தென்கையிலை உலக சமாதான ஆலயத்தினால் வருடந்தோறும் உலகுவாழ் மக்களின் நன்மைக்காக, பிரபஞ்சத்தில் சாந்தியும் சமாதானமும் அமைதியும் வேண்டி நடத்தப்பட்டு வருகின்ற பிரபஞ்ச நல மகாதவ வேள்வித்தொடர் வரிசையில் இவ்வாண்டிற்கான 35 ஆவது தவவேள்வியை எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் 12.01.2025 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரையிலான 21 நாட்கள் தொடர்ச்சியாக ஞானவள்ளல் பரஞ்சோதி மகான் பிரணவாலயத்தின் தவபீடத்திலிருந்து இயற்றவுள்ளார்.

இந்நிகழ்வுகளையொட்டி உலகெங்கும் ஆன்மிக பொதுக்கூட்டுப் பிரார்த்தனைகள் நடத்தப்படவுள்ளன. இக்காலப்பகுதியில் பல்வேறு நாடுகளிலும் கூட்டுப் பிரார்த்தனைகள் மற்றும் சத்சங்கம், அருளுரைகள், அன்னதானங்கள் என்பன நடைபெற ஏற்பாடகியுள்ளன.

அந்தவகையில் உலக சமாதான ஆலயத்தின் யாழ்ப் பாண கிளையினரால் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியிலிருந்து காலை 8.30 மணிவரை நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலய மண்டபத்தில் திருமூர்த்தி மலையிருந்து நடைபெறும் நிகழ்வுகளை நேரடியாக அஞ்சல் செய்யப்படவுள்ளதுடன் கலந்து கொள்பவர்களுக்கு இறை பிரசாதங்களும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மன்னாரில் சிறப்பாக நடந்தது வடக்கு பண்பாட்டுப் பெருவிழா









மன்னார், டிசெ. 18

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு நடத்தும் மாகாண பண்பாட்டுப் பெருவிழாவும் கண்காட்சியும், மன்னாரில் நேற்று இடம்பெற்றன.

மன்னார் நகர சபை மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் இதன் ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெற்றன.

மங்கல வாத்தியங்களுடனும் கலை நிகழ்வுகளுடனும் விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

இதன்போது, தமிழ், சிங்கள, இஸ்லாமிய, கிறிஸ்தவ பண்பாடுகளை வெளிப்படுத்தும் வகையில் பொம்மலாட்டம், மயிலாட்டம், பொய்க்கால் குதிரை, தமிழ் இன்னியம் உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கி ஆரம்பப் பேரணி இடம்பெற்றது.

இதன்பின் பண்பாட்டுக் காண்பியக் கூடமாக தமிழர் பண்பாட்டை பிரதிபலிக்கும் ஓவியங்கள், புத்தகங்கள், சிற்பங்கள், பண்பாட்டலுவல்கள் திணைக்களம் செய்த ஆவணப்படுத்தல் வேலைகள் என்பன நகர சபை மண்டபத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் கலை நிகழ்வுகளும், பரிசில் வழங்கல் நிகழ்வும் இடம்பெற்றது.

சில வெளியீட்டு நிறுவனங்களின் புத்தகங்களும் இங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டதுடன், பல வருடங்களுக்கு முன் வெளியான - பார்ப்பதற்கு மிக அரிய புத்தகங்களும் இங்கு காட்சிப்படுத்தப்பட்டன.

நிகழ்வின் தலைமை விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமாக க.கனகேஸ்வரன், கௌரவ விருந்தினராக நானாட்டான், நாட்டுக்கூத்துக் கலைஞர் செ.மாசிலாமணி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈළනාඩු
18.12.2024 புதன்கிழமை
பிலவ வருடம், மார்கழி 03

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் அரசியல்வாதிகளின் கல்வித் தகமை

சபாநாயகரின் கலாநிதிப் படிப்பு தொடர்பில் எழுந்த சர்ச்சைகளை தொடர்ந்து அவர் பதவி விலகியிருந்தார். சபாநாயகர் தனது கலாநிதி சான்றிதழை உறுதிப் படுத்த முடியாமல் போனதைத் தொடர்ந்தே, அவர் பதவி விலகியிருந்தார். இதனைத் தொடர்ந்து ஆளும் கட்சியிலுள்ள அரசியல்வாதிகளின் கல்வித் தகுதி தொடர்பில் தென்னிலங்கை அரசியல் சூழலில் கேள்விகள் எழுந்திருக்கின்றன. அரசியல்வாதிகளின் கல்வித் தகுதி தொடர்பில் உரையாடல்கள் இடம்பெறுவ தானது, தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் புதிய விடயமாகும்.

தற்போது எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் கல்வித் தகுதி தொடர்பிலும் கேள்விகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. சஜித் பிரேமதாச வெளி நாட்டில் படித்தார் என்றே கூறப்படுகின்றது. இந்த நிலையில் அவர் தனது கல்வித் தகுதியை உறுதிப்படுத்த வேண்டியவராக இருக்கின்றார்.

இந்த விடயம் தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகளின் நிலைமை என்ன? அவர்களது கல்வித் தகுதி தொடர்பிலும் உரையாடல்கள் இடம்பெறுமா? ஒரு காலத்தில் இலங்கை தமிழரசு கட்சி - அதன் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் அரசியல்வாதிகள் பெரும்பாலும் ஆங்கிலம் தெரிந்த சட்டத்தரணிகளாக இருந்திருக்கின்றனர். ஆங்கிலமும் சட்டமும் தமிழ் அரசி யல்வாதிகளின் பிரதான தகுதிகளாக நோக்கப்பட்ட காலமொன்று இருந்தது. ஆயுத விடுதலை இயக்கங்களின் எழுச்சியைத் தொடர்ந்துதான் சாதாரண இளைஞர்களின் அரசியல் பிரவேசம் நிகழ்ந்தது.

ஆயுதப் போராட்டம் இல்லாவிட்டால் தொடர்ந்தும் அப்படியானதொரு நிலை மைதான் தொடர்ந்திருக்கும் ஆனால், அவ்வாறு ஆங்கிலம் தெரிந்த, சட்டம் படித்த அரசியல்வாதிகளால் தங்களது அரசியல் முன்னெடுப்புக்களில் வெற்றி பெற முடியவில்லை. அவர்கள் அனைவருமே ஆங்கிலம் தெரிந்த அரசியல் புலமையுள்ள (அவர்களில் சட்டம் படித்தவர்களும் இருக்கலாம்) சிங்கள அரசியல் தலைவர்களின், இராஜதந்திரத்திற்கு முன்னால் அவமானகரமாகத் தோற்றுப் போயினர் என்பதே வரலாறு.

பின்னர் இயக்கங்களின் வழி வந்தவர்களும் தென்னிலங்கை அரசியல் சாணக்கியத்திற்கு முன்னால் தோற்றுப் போயினர். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை சாதகமாகக் கையாளுவதில் அன்றிருந்த மிதவாதிகளுத் சரி, ஆயுத விடுதலை இயக்கங்களும் சரி தூரநோக்கோடு செயல்பட்டிருக்கவில்லை - ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மட்டுமே காலத்திற்கு பொருத்த மான முடிவை எடுத்திருந்தது. அதற்காக அந்த அமைப்பின் அனைத்து அணுகு முறைகளும் சரி என்றில்லை.

இதுவரையான அனுபவத்தின்படி, சிங்கள இராஜதந்திரத்திற்கு முன்னால் தோற்றுப் போனதே இன்றுவரையான தமிழர் அரசியல் வரலாறாகும். இந்த நிலையில் கல்வித் தகுதி ஆங்கிலம் இருந்தால் மட்டும் அவர்கள் பொருத்த மானவர்கள் என்று சொல்லிவிட முடியுமா என்னும் கேள்வி எழுவது இயல்பானதே - படிப்போடு சேர்த்து, தூரநோக்கோடு சிந்திக்கும் ஆற்றலும், சமயோசிதமாக தீர்மானங்களை எடுக்கக் கூடிய ஆளுமையும், சர்வதேச அரசியல் தொடர்பில் அவதானமும் உள்ள தமிழ் அரசியல்வாதிகளே இன்றைய தேவையாகும்.

இந்த வகையில் நோக்கினால் தற்போதைய சூழலில், தமிழ் அரசியல் சூழலில் படித்தவர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் மிகவும் குறைவுதான். குறிப்பாக தமிழ் அரசு கட்சியின் இன்றைய தலைமையில் ஆளுமையுள்ளவர்கள் என்று எவரைக் குறிப்பிடலாம் என்னும் கேள்வியுண்டு.

மறுபுறம், தமிழ் கட்சிகளிலுள்ள அரசியல்வாதிகள் (அவர்களில் சட்டத்தரணி களுமுண்டு) சிலரது கருத்துக்களை நோக்கினால், அவர்களில் பலர் அந்தரத்தில் சஞ்சரிப்பவர்களாகவே தங்களை இனங்காட்டிக் கொள்கின்றனர். அவர்களி டமிருந்து ஆரோக்கியமான, தூரேநோக்குடன் சிந்திக்கக் கூடிய ஆற்றலைக் காணவில்லை. தற்போது நாடாளுமன்றத்துக்குத் தெரிவானவர்களில் ஒரு சிலரே தேறக் கூடியவர்களாகத் தெரிகின்றனர். எனினும் தற்போது தென்னி லங்கையில், அரசியல்வாதிகளின் கல்வித் தகுதி தொடர்பில் கேள்வி எழுந்தி ருப்பதால் - ஏன் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் கல்வித் தகுதி பற்றி மக்களுக்குச் சொல்லக் கூடாது? ஏனெனில் மக்களின் பிரதிநிதியாக வந்திருப்பவர்கள், வரக் கூடியவர்களுக்கு ஆகக் குறைந்த கல்வித் தகுதியாவது இருக்க வேண்டியது கட்டாயமாகும். ஒரு காலத்தில் இயக்கங்களில் இருந்தோம், நாங்கள் முன்னாள் போராளிகள், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களாக இருந்தோம், ஒவ்வோர் ஆண்டும் மாவீரர் துயிலுமில்லத்தில் விளக்கேற்று கின்றோம் - இவைகள் ஒரு பிரதிநிதிக்கான தகுதிகள் அல்ல. இவற்றையும் தாண்டிய தகுதிகள் கட்டாயம் தேவை.

# சாவகச்சேரி நகர சபை முன்பாக வர்த்தகர்கள், மக்கள் போராட்டம்



யாழ்ப்பாணம், டிசெ.18

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி நகர வர்த்த கர்களும், பொதுமக்களும் சாவகச்சேரி நகர சபை முன்பாக நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சாவகச்சேரி நகர சபையால் அண்மையில் கட்டப்பட்ட புதிய கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்காக பகிரங்கமாக கேள்வி கோரப் பட்டுள்ளது.

இந்தக் கடைகளை கட்ட ஆரம்பிக்கும் போது 2000 ஆம் ஆண்டு யுத்தத்தில் கடைகள் அழிவடைந்த வர்த்தகர்களுக்கு புதிய கடைத் தொகுதியில் முன்னுரிமை வழங்கப்படும் என நகர சபையால் உத்தர வாதமளிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், குறித்த வாக்குறுதியை மீறி கேள்வி கோரப்பட்டுள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், விண்ணப்பதாரி நகராட்சி மன்ற எல்லைக்குள் வசிக்க வேண்டும் என்ற நிபந்தனையை உள்ளடக்க வேண்டும் எனக் கோரியுமே இந்தப் போராட்டம் இடம்பெற் றது.

இதன்போது, நகர சபையின் பிரதான நுழைவாயிலை பூட்டி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனையடுத்து அங்கு வந்த சாவகச்சேரி பொலிஸார் பூட்டை உடைத்து அகற்றிய தோடு போராட்டக்காரர்களை கலைக்க முற் பட்டனர். இதனால், நுழைவாயிலில் அமர்ந்த வாறு அவர்கள் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இத்தருணத்தில் நகரசபை வாகனங்க ளுக்கு பொறுப்பான அதிகாரி கழிவகற்றும் உழவி யந்திரத்தால் போராட்டத்தில் ஈடுபட்டவர் கள் மீது மோத முயற்சித்த தோடு அதை வீடியோ எடுத்த ஊடகவிய லாளரையும் கடுமையாக அச்சுறுத்தினார். இதனால் அங்கு கடும் வாக்குவாதம் ஏற் பட்டது.

இதேவேளை, குறித்த கேள்வி கோரலை இரு வாரங்களுக்கு ஒத்திவைக்குமாறு உள்ளூ ராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

(எ-05)

# டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கு வவுனியாவில் விசேட செயல்திட்டம்



வவுனியா, டிசெ.18

வவுனியாவில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதைய டுத்து அதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விசேட செயல்திட்டம் ஒன்று முன்னெடுக் கப்பட்டது.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார், இராணுவத் தினர் இணைந்து நகர சபையின் பங்களிப்பு டன் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை துப்புரவு செய்யும் பணியை முன்னெடுத்தனர்.

வவுனியா நகரம், வைரவப்புளியங்குளம், இறம்பைக்குளம், ராணிமில் வீதி, வெளிக்குளம் உள்ளிட்ட பகுதிகளில் குழுவாக சென்ற இவர்கள் வீதியோரங்கள், வாய்க்கால் களில் காணப்பட்ட பொலித்தீன்கள், வெற் றுப் போத்தல்கள், சிரட்டைகள், மட்பாண் டத் துண்டங்கள், ரயர்கள் மற்றும் நீர் தேங்கி நிற்கக் கூடிய பொருட்களை அகற்றி அப் பகுதியைச் சுத்தம் செய்தனர். (எ-10)

# வவுனியாவில் யானையை மோதித்தள்ளியது கூலர் வாகனம்

வவுனியா, டிசெ. 18

வவுனியாவில் காட்டு யானையை கூலர் வாகனம் மோதியதில் ஒருவர் சிறுகாயங்க ளுக்கு உள்ளானதுடன் யானை படுகாயம டைந்தது.


இந்தச் சம்பவம் மதவாச்சி - மன்னார் பிரதான வீதியில் பெரியகட்டு பகுதியில் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் இரவு மன்னார் பகுதி யிலிருந்து மதவாச்சி நோக்கி மீன்களை ஏற்றிச் சென்ற கூலர் ரக வாகனம் பிரதான வீதியில் நின்ற காட்டு யானையுடன் மோதியது.

இதனால் வாகனம் பலத்த சேதமடைந்துள்ளதுடன் அதில் பயணித்த ஒருவர் சிறுகாயங்களுக்கு உள்ளானார். இதே வேளை, வாகனத்தில் அடிபட்ட யானைக்கு பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

அதற்கு சிகிச்சையளிக்கும் செயல்பாடு களில் வனஜீவராசிகள் திணைக்களத்தின் மருத்துவர்கள் ஈடுபட்டுள்ளனர். (எ-10)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். புது வாகனம் வாங்குவீர்கள். அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள்.

**இடபம்**
பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பழைய பிரச்னைகள் தீரும். ஆடை ஆபரணம் சேரும்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். யாருக்கும் பணம் நகை வாங்கித் தருவதில் ஈடுபட வேண்டாம்.

**கடகம்**
விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வாகனத்தை இயக்கும் போது அலைப்பேசியில் பேச வேண்டாம்.

**சிம்மம்**
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியை பைசல் செய்ய உதவிகள் கிடைக்கும். புதிய கோணத்தில் யோசித்து பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். சிறப்பான நாள்.

**கன்னி**
உறவினர்கள், நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். ரத்தை பெருக்குவீர்கள்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். எதிர் பார்த்திருந்த தொகை கைக்கு வரும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**விருச்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலே ஒரு வித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள்.

**தனுசு**
மனைவி வழியில் அனுகூலம் உண்டு. புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**மகரம்**
விஐபிகள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள்.

**கும்பம்**
நட்பு வட்டம் விரியும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**மீனம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டாகும். பழைய இனிய சம்பவங்கள் அனைத்தும் நினைவுக்கு வரும். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும்.


# வாகன பற்றிகளை திருடிவந்த இருவர் வவுனியாவில் சிக்கினர்

வவுனியா, டிசெ.18

வவுனியா நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேப்பங்குளம் பகுதியிலுள்ள வாகனத் தரிப்பிடம் ஒன்றில் வாகன பற்றரிகளை திருடிய குற்றச்சாட்டில் இருவரை நெளுக்குளம் பொலிஸார் கைது செய்தனர்.

இந்த வாகனத் தரிப்பிடத்தில் வாகன பற்றரிகள் திருடப்பட்டுள்ளதாக நெளுக்குளம் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் இரகசிய விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன் போது நான்கு வாகன பற்றரிகளுடன் இரு சந்தேகநபர்களை கைது செய்ததுடன் குறித்த குற்றச்செயலுக்கு பயன் படுத்தப் பட்டது என சந்தேகிக்கப்படும் ஓட்டோ ஒன்றையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.(எ-10)



# மயக்க மருந்து கொடுத்து இரு ஓட்டோக்கள் திருட்டு

## வவுனியாவில் கடத்தி சாய்ந்தமருதில் விற்பனை



வவுனியா, டிசெ.18

வவுனியாவில் மயக்க மருந்து கொடுத்து ஓட்டோக்களைத் திருடி விற்பனை செய்த நிலையில் இரு ஓட்டோக்கள் மீட்கப் பட்டுள்ளதுடன், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா நகரப் பகுதியில் இருந்து சிவப்பு நிற ஓட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்திச் சென்று, சாரதிக்கு மயக்க மருந்தை கொடுத்து அவரை கீழே தள்ளி வீழ்த்தி விட்டு, அந்த ஓட்டோவை கடத்திச் சென்ற சம்பவம் பதிவாகியிருந்தது.

இதேபோன்று வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் இருந்து உளுக்குளம் நோக்கி ஓட்டோவை வாடகைக்கு அமர்த்திச் சென்று சாரதிக்கு மயக்க மருந்து கொடுத்து ஓட்டோ ஒன்று கடத்திச் செல்லப்பட்ட சம்பவமும் பதிவாகியிருந்தது.

இது தொடர்பில் வன்னி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சமந்த விஜசேகரவின் ஆலோசனையில், வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மலன் பெரேராவின் வழிநடத்தலில், வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி அழகியவண்ண தலைமையில் உப பொலிஸ் பரிசோதகர் சாரங்க ராஜகுரு, பொலிஸ் சார்ஜன்களான திஸநாயக்க, ரன்வெல, பொலிஸ் கொன்தாபிள்களான சிந்தக, விதுசன், சாரதியான திஸநாயக்க உள்ளிட்ட பொலிஸார் விசேட நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் வவுனியா நகரப் பகுதியில் கடத்தப்பட்ட ஓட்டோ நீல நிற வர்ணப்பூச்சு பூசி வாகன இலக்கத்தகடு மாற்றப்பட்டு கெக்கிராவ பகுதியில் நின்ற நிலையில் மீட்கப்பட்டது. அத்துடன் வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் இருந்து உளுக்குளம் சென்ற போது கடத்திச் செல்லப்பட்ட பச்சை நிற ஓட்டோ 9 இலட்சம் ரூபாய்க்கு இலக்கத்தகடு மாற்றி விற்பனை செய்யப்பட்ட நிலையில் சாய்ந்தமருது பகுதியிலிருந்து மீட்கப்பட்டது.

இந்த இரு சம்பவம் தொடர்பில் கெக்கிராவ பகுதியைச் சேர்ந்த 37 வயது நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை, வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி வருவோர் தரும் குடிபானங்களை அருந்தாது விழிப்புடன் செயல்படுமாறு வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர். (எ-10)

# வவுனியாவில் பப்பாசி செய்கை பாதிப்பு

## அழிவுகளை பார்வையிட்டார் ரவிகரன் எம். பி.

வவுனியா, டிசெ. 18

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 21 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த 500 விவசாயிகளின் பப்பாசி செய்கை கனமழை காரணமாக முழுமையாகவும், பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் விவசாயிகளின் கோரிக்கைக்கு அமைவாக, பாதிக்கப்பட்ட சில பப்பாசித் தோட்டங்களை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், பார்வையிட்டார்.

விவசாயிகளுக்குரிய நட்டஈடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு உரிய தரப்பினர்களுடன் பேசுவதாகவும் அவர் கூறினார்.

இந்த நிலையில் பெரும் நிதிச்செலவில் செய்கை பண்ணப்பட்ட பப்பாசி செய்கைகள் அண்மையில் பெய்த கனமழையால், சில தோட்டங்கள் முழுமையாகவும், சில தோட்டங்கள் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக பப்பாசி அறுவடைக்குத் தயாரான நிலையிலேயே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு, பாதிக்கப்பட்ட சில விவசாயிகள் என்னிடம் முறையிட்டதற்கு அமைவாக வந்து பார்வையிட்டேன்- என்றார். (எ-10)

# கசிப்புடன் கைதான இளைஞனுக்கு பிணை

யாழ்ப்பாணம், டிசெ. 18

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் கிழக்கு பகுதியில் கசிப்புடன் 21 வயது இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன் போது அவரிடமிருந்து 3 போத்தல் கசிப்பு மீட்கப்பட்டது.

குறித்த நபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்திய வேளை, பிணையில் செல்வதற்கு நீதிவான் அனுமதியளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் முதலீடு செய்யுமாறு வர்த்தக பிரதிநிதிகளுக்கு அழைப்பு!

## ஜனாதிபதி அநுரகுமார விடுத்தார்

கொழும்பு, டிசெ. 18

**ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள நிலையில், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நேற்று முன் தினம் பிற்பகல் புதுடில்லியில் இந்திய முன்னணி வர்த்தகப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.**




இந்திய கைத்தொழில் சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலில் இந்தியாவின் முன்னணி தொழில் முனைவோர் கலந்து கொண்டனர்.

இலங்கையில் முதலீடு செய்வதற்கான சாதகமான சூழல் குறித்து விளக்கமளித்த ஜனாதிபதி, இலங்கையில் முதலீடு செய்யுமாறு இந்திய தொழில் முனைவோரிடம் கோரிக்கை விடுத்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான முதலீடு மற்றும் வர்த்தக உறவுகளை விரிவுபடுத்தும் நோக்கில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் டிஜிற்றல் பொருளாதாரம், சுற்றுலா, புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கைகளின் அடிப்படையில் இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகளை விஸ்தரிப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து கவனம் செலுத்த இந்திய முன்னணி வர்த்தகப் பிரதிநிதிகள் விருப்பம் தெரிவித்ததுடன், அதற்குத் தேவையான முதலீட்டு வசதிகளை வழங்க இலங்கை அரசாங்கம் இணங்கியுள்ளது.

இந்த சந்திப்பில் தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோவும் பங்கேற்றிருந்தார். (அ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலை மறைக்க இடமளிக்கமுடியாது!

## கூறுகிறார் ஞானசார தேரர்

கொழும்பு, டிசெ. 18

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்த உண்மையை மறைக்க இடமளிக்க முடியாது என பொதுபல சேனா அமைப்பின் பொது செயலாளர் கலகொட அத்தே ஞான சார தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை தொடர்ந்து அது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அமைக்கப்பட்டது. ஆணைக்குழு அறிக்கையில் சாட்சிகள் பல உள்ளன. ஆனால் நாம் கூறிய கருத்துக்களை மறைத்து உண்மையை மறைக்கும் விடயம் இடம்பெற்றுள்ளது. ஆனாலும் உண்மையை மறைக்க நாம் இடமளிக்கப்போவதில்லை.

ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியை நிர்வகிக்கும் வாய்ப்பை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய எனக்கு கையளித்தார். அதற்காக நாடு தழுவிய ரீதியில் சேகரித்த தகவல்களின் அடிப்படையில் 47 பரிந்துரைகளை நாம் முன்வைத்துள்ளோம். அரசாங்கத்திற்கு தேவைப்படும் அனைத்து தகவல்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னராக முன்னாள் ஜனாதிபதி கோத்தாவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது.அதனை தொடர்ந்து ரணில் விக்கிரம சிங்கவிடம் இதனை கையளிக்கும் வாய்ப்பும் ஹக்கீம் எம். பியின் தலையீட்டின் காரணமாக வழங்கப்படவில்லை. ஆகவே தற்போதாயினும் இந்த விடயத்தை முன்கொண்டு செல்ல தேவையான நிறுவனத்தை அமைக்குமாறு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்- என்றார். (அ)

# பாப்பரசர் பதவிக்கு போட்டியிடும் மல்கம்

கொழும்பு, டிசெ. 18

புதிய பாப்பரசர் பதவிக்கு ஈஸ்டர் தாக்குதலில் தொடர்புடைய குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வரும் கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் போட்டியிடவுள்ளதாக கொழும்பில் இருந்து வெளிவரும் இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த இணையத்தளம் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அடுத்த பாப்பரசரை தெரிவு செய்ய தகுதி பெற்ற 12 கர்தினால்களில் கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் கர்தினாலும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வத்திக்கானுக்கு வரும் உலகு எங்கிலும் உள்ள கர்தினால்களின் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் புதிய பாப்பரசர் தேர்ந் தெடுக்கப்படுவார்.

அதற்கு வாக்களிக்கத் தகுதியுள்ள கர்தினால்களில் 2/3 பெரும்பான்மையைப் பெறும் கர்தினால் அடுத்த பாப்பரசராக தெரிவு செய்யப்படுவார்.

பேராயர் மால்கம் ரஞ்சித் கர்தினாலும் இந்த பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பேராசிரியர் பதவியை சேவைக்காலத்தில் மட்டுமே பயன்படுத்துமாறு அறிவுறுத்தல்!

கொழும்பு, டிசெ. 18

பேராசிரியர் பதவியினை சேவைக்காலத்தில் மட்டுமே பயன்படுத்த முடியும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளதாக கொழும்பில் இருந்து வெளிவரும் வார ஏடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த வார ஏடு வெளியிட்டுள்ள செய்தியில்-சிரேஷ்ட பேராசிரியர், பேராசிரியர், உதவிப் பேராசிரியர் ஆகிய பதவிகளை அந்த கல்வி நிறுவனம் அல்லது உயர்கல்வி நிறுவனத்தில் சேவையாற்றும் காலப்பகுதியில் மட்டுமே பயன்படுத்த முடியும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரான சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இத்தகவல் கடந்த ஜூலை மாத வெளியிடப்பட்ட சுற்றிக்கை ஒன்றின் மூலம் அனைத்து பல்கலைக்கழக துணைவேந்தர்கள், பல்கலைக்கழக வளாகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி சிரேஷ்ட பேராசிரியர், பேராசிரியர், உதவிப் பேராசிரியர் ஆகிய பதவிகளை அந்த கல்வி நிறுவனம் அல்லது உயர்கல்வி நிறுவனத்தில் சேவையாற்றும் காலப்பகுதியில் மட்டுமே பயன்படுத்த முடியும்.

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்) குழு வழங்கிய பரிந்துரைகளின்படி, 03.07.2024 அன்று நடைபெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 1,120 ஆவது கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

பேராசிரியர்கள் தங்கள் பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டால் மட்டுமே எமரிட்டஸ் பேராசிரியரைப் பயன்படுத்த முடியும்.

எனவே, அனைத்து பல்கலைக்கழக துணைவேந்தர்கள், பல்கலைக்கழக வளாகங்களின் தலைவர்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் பணிப்பாளர்களுக்கு சிரேஷ்ட பேராசிரியர், பேராசிரியர், உதவிப் பேராசிரியர் பதவிகளை வழங்கும்போது மேற்கூறிய புதிய சரத்தை நியமனக் கடிதங்களில் சேர்க்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மியன்மார் சைபர் கிரைம் முகாம்களில் சிக்கிய 27 இலங்கையர் நாடு திரும்பினர்!

கொழும்பு, டிசெ. 18

மியன்மாரில் மனித கடத்தல்காரர்களால் பாதிக்கப்பட்ட எட்டு பெண்கள் உட்பட 27 பேர் கொண்ட இலங்கையர்கள் குழு நேற்று முன் தினம் நாடு திரும்பியுள்ளனர்.

தாய்லாந்தின் பாங்கொக்கில் இருந்து சிறிலங்கன் எயார் லைன்ஸின் யு.எல் 405 என்ற விமானத்தில் இவர்கள் நேற்று முன் தினம் பிற்பகல் கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

பின்னர், சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகளின் கீழ் அதிகாரிகள் தனிநபர்களை அவர்களது வீடுகளுக்கு அழைத்துச் சென்றனர்.

மனித கடத்தல் வலையமைப்புகளுடன் தொடர்புடைய சட்டவிரோத சைபர் கிரைம் நடவடிக்கைகளில் பாதிக்கப்பட்டவர்கள் சிக்கியுள்ளனர்.

மியன்மாரில் இதேபோன்ற முகாம்களில் 14 இலங்கையர்கள் தங்கியிருப்பதாகவும், அவர்களை விடுவிக்கும் முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அவர்களை மீட்கும் பணிகளை துரிதப்படுத்துமாறு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.இதற்காக இலங்கை, தாய் லாந்து தூதரக அதிகாரிகள், மியான்மர், தாய்லாந்து அதிகா ரிகள் மற்றும் சர்வதேச அமைப்புகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த முயற்சினை அரசாங்கம் தொடங்கியது.

2024 நவம்பர் 1, முதல், மியன்மாரில் உள்ள ஆட்கடத்தல் முகாம்களில் இருந்து 63 இலங்கையர்களை அரசாங்கம் திருப்பி அனுப்பியுள்ளது.

இதில் நவம்பர் 25 ஆம் திகதி நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட 32 பேர் அடங்குவர். இந்த ஆண்டின் தொடக்கத்தில், ஏப்ரல், ஒகஸ்ட் மாதங்களில் முறையே 08 மற்றும் 20 நபர்கள் மீட்கப்பட்டனர்.

வேலை தேடுபவர்கள்இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மூலம் வாய்ப்புகளை சரிபார்க்க அறிவுறுத்தப்படுகிறார்கள். (அ)

# இந்திய ஜனாதிபதியை சந்தித்தார் அநுரகுமார

கொழும்பு, டிசெ. 18

இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அந்த நாட்டு ஜனாதிபதி திரௌபதி முர்முவை சந்தித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும், இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன் தினம் பிற்பகல் புதுடில்லியில் உள்ள ராஷ்டிர பதி பவனில் நடைபெற்றது. இந்த சந்திப்பின் போது, இந்திய - இலங்கை இடையிலான நீண்டகால நட்புறவை வலுப்படுத்துவது மற்றும் பிராந்திய பாதுகாப்பை வலுப்படுத்துவது குறித்து கருத்துப் பரிமாறப்பட்டது.

சிநேகபூர்வ சந்திப்பின் பின்னர் இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு இராப்போசன விருந்து வழங்கினார்.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ ஆகியோரும் இந்த சந்திப்பில் இணைந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசியப் பொருட்களுக்கு அதிகபட்சமான சில்லறை விலை

## விரைவில் நிர்ணயம் என்கிறார் வர்த்தக அமைச்சர்

கொழும்பு, டிசெ. 18

**பல அத்தியாவசிய பொருட்களுக்கு அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்படவுள்ளதாக வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

நுகர்வோர் விவகார அதிகார சபையுடன் இணைந்து இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

அரிசி மற்றும் தேங்காய் போன்றவற்றுக்கான விலை அதிகரித்துள்ள நிலையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்ட அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்திப்பதற்கான தீர்வாக அரிசியை இறக்குமதி செய்யத் தனியார் பிரிவினருக்கு அரசாங்கம் அனுமதியளித்தது.

இதன்படி அந்த காலப்பகுதியில் 4,800 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அரிசியை இறக்குமதி செய்யத் தனியார் பிரிவினருக்கு இன்னும் நான்கு நாட்கள் மாத்திரமே எஞ்சியுள்ளன.

இதேவேளை, அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட முதற் தொகுதி அரிசி நேற்று முன் தினம் இரவு நாட்டை வந்தடைந்தது.

இதன்படி, முதற்கட்டமாக 5,200 மெற்றிக் தொன் அரிசி நாட்டை வந்தடைந்துள்ளது.

இதேவேளை, கடந்த வாரங்களில் பொலனறுவை மாவட்டத்தில் நெல் ஆலை உரிமையாளர்களினால் 82,11,000 கிலோ அரிசி சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதில் ஐம்பது சதவீதமானவை நாடு அரிசி என அந்த அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரிசி தட்டுப்பாட்டுடன் பொலன்னறுவை மாவட்டத்தில் பாரிய, நடுத்தர மற்றும் சிறு நெல் ஆலைகளில் தங்கியுள்ள நுகர்வோர் விவகார அதிகார சபையின் அதிகாரிகளது கண்காணிப்பின் கீழ் சந்தைக்கு விநியோகிக்கப்படும் அரிசியைப் பரிசோதிக்கும் செயற்பாடு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகிறது.

இதன்படி, பொலனறுவை மாவட்டத்தின் பிரதான நெல் ஆலைகள் மற்றும் ஏனைய நெல் ஆலைகளினால் கடந்த வாரங்களில் 410,50,000 கிலோ நாடு அரசி விநியோகிக்கப்பட்டுள்ளது.

(அ)

# இந்தியா-இலங்கை இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

கொழும்பு, டிசெ. 18

இரட்டை வரி விதிப்பைத் தவிர்ப்பது மற்றும் அரச அதிகாரிகளின் திறனை முன்னேற்றுவது தொடர்பில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன

.மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன் தினம் பிற்பகல் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான ஹைதராபாத் மாளிகையில் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து, இரட்டை வரி விதிப்பைத் தடுப்பது மற்றும் அரசு அதிகாரிகளின் திறன் மேம்பாடு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இந்திய-இலங்கை தலைவர்கள் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டன.

(அ)

# ரிஸ்வி சாலிக்கு எதிராக மருத்துவ சபையில் முறைப்பாடு செய்யவுள்ளார் நளின் பண்டார

கொழும்பு, டிசெ. 18

பிரதிச் சபாநாயகர் ரிஸ்வி சாலிக்கு எதிராக மருத்துவ சபையில் முறைப்பாடு செய்யவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி யின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மருத்துவ கட்டளைச் சட்டத்தை மீறியே அவர் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

விசேட வைத்தியருக்கான பட்டம் பெறவேண்டுமாயின் மருத்துவக் கல்லூரியில் சான்றிதழைப் பெற்றிருத்தல் அவசியம்.

அவர் அவ்வாறு சான்றிதழைப் பெற்றிருக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிய வந்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

(அ)

# ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி!

கொழும்பு, டிசெ. 18

நேற்று முன் தினத்துடன் ஒப்பிடுகையில் நேற்று அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி சற்று வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 286 ரூபாய் 44 சதம், விற்பனைப் பெறுமதி 295 ரூபாய் 9 சதம்.

ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 361 ரூபாய் 80 சதம், விற்பனைப் பெறுமதி 376 ரூபா 1 சதம். யூரோ ஒன்றின் கொள்மு தல் பெறுமதி 299 ரூபாய் 53 சதம், விற்பனைப் பெறுமதி 312 ரூபாய் 17 சதம்.

சுவிஸ் பிராங் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 317 ரூபாய் 75 சதம், விற்பனைப் பெறுமதி 332 ரூபாய் 95 சதம்.

கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 199 ரூபா 76 சதம், விற்பனைப் பெறுமதி 208 ரூபாய் 44 சதம்.

அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 180 ரூபாய் 45 சதம், விற்பனைப் பெறுமதி 189 ரூபாய் 89 சதம்.

சிங்கப்பூர் டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 210 ரூபாய் 45 சதம், விற்பனைப் பெறுமதி 220 ரூபாய் 31 சதம்.

ஜப்பானிய யென் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 1 ரூபாய் 85 சதம், விற்பனைப் பெறுமதி 1 ரூபாய் 92 சதம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மதுபான அனுமதி வழங்க சிபார்சு செய்தோரும் சபாநாயகரைப் போல் பதவி துறக்கவேண்டும்!

## சுமந்திரன் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 18

மதுபானச்சாலை அனுமதி வழங்குவதற்குச் சிபார்சு செய்தவர்களும் சபாநாயகர் பதவி விலகியது போன்று பதவி விலக வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

சபாநாயகர் பதவி விலகியமை தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சபாநாயகர் கலாநிதிப் பட்டம் தனக்கு இருக்கின்றது, அதனை தற்போது நிரூபிக்க முடியாது என்பதால் பதவி விலகுவதாக அறிவித்துள்ளார். அது நல்லதொரு விடயம். அதை நான் வரவேற்கின்றேன். இதேபோன்று மற்றவர்களும் மற்ற மற்ற விடயங்களுக்காக விலகுவார்களாக இருந்தால் அதுவும் நல்ல விடயம்தான்.

மதுபான அனுமதி எடுத்தவர்களும் தாமாகவே விலகுவார்களாக இருந்தால் அதுவும் நல்ல விடயம்.

விக்னேஸ்வரன் ஐயா தான் மதுபான அனுமதி கொடுத்துவிட்டேன் எனத் தெரிவித்து அவர் தேர்தலில் போட்டியிடமால் கொழும்புக்குப் போய் விட்டார்.

ஒவ்வொரு இடங்களிலும் நிறைய மதுபான அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது என்று அரசு அறிவித்துள்ளது.

அதைச் சிபார்சு செய்தவர்கள் யார் என்ற தகவல் இன்னும் வரவில்லை. அந்தத் தகவல் வருகின்றபோது சிபார்சு செய்தவர்களும் சபாநாயகர் பதவி விலகியமை போன்று விலக வேண்டும். அதனைச் சந்தோசமாக வரவேற்போம்-என்றார்.

(அ)

# எம்.பிக்கள் தகைமை பற்றி கேள்வி கேட்பது முறைமை மாற்றத்துக்குக் கிடைத்த வெற்றி

## நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார

கொழும்பு, டிசெ. 18

"பாராளுமன்ற உறுப்பினர்களின் கல்வித் தகைமை பற்றி மக்கள் கேள்வி எழுப் புவதே முறைமை மாற்றத்துக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும். பாராளுமன்ற ஜனநாயகத்தை சிறந்த இடத்துக்க தேசிய மக்கள் சக்தி கொண்டு வந்துள்ளது." என்று நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பாராளுமன்ற இணையத்தளத்தில் எனது பெயர் கலாநிதி ஹர்ஷன என பெயரிடப்பட்டிருந்தது. அது தொடர்பில் என்னால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து நீக்கப்பட்டது. இது தொடர் பில் பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களத்தால் மன்னிப்பும் கோரப்பட்டிருந்தது.

எனினும், இந்த சம்பவத்தை பயன்படுத்தி எனக்கு எதிராக தீவிர பிரசாரம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. நான் 25 வருடங்களாக சட்டத்தரணியாக செயற்பட்டுள்ளேன். ஒருபோதும் எனது பெயருக்கு முன்னால் கலாநிதி பட்டத்தை பயன்படுத்தியது கிடையாது.

எனவே, எப்படி கலாநிதி என்ற பட்டம் பயன்படுத்தப்பட்டது? என்னை அகௌரவத்துக்கு ட்படுத்துவதற்காகவும், எனது அரசியல் இயக்கம் மீதான நம்பிக்கையை சீர்குலைப்பதற்காகவும் எவரேனு ம் போலியான தகவலை உள்ளடக்கியுள்ளனரா என்ற சந்தேகம் எழுகின்றது.



தேசிய மக்கள் சக்தியென்பது தூய்மையான அரசியல் இயக்கமாகும். மக்கள் இன்று கல்வித் தகைமை பற்றி கேள்வி எழுப்புகின்றனர். இதுதான் சிறந்த மாற்றம். ஏனெனில் இதற்கு முன்னர் பார் பேமீட் பற்றிதான் பேசப்பட்டது. கப்பம் கோருபவர்கள், மண் கடத்துபவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்துள்ளனர். ஆனால் இன்று கல்வித் தகைமை பற்றி கருத்தாடல் [illegible] பளிக்கின்றது என்றார். (அ)

# சஜித் அணியில் இருந்து விலகினார் ஜகத்குமார!

கொழும்பு, டிசெ. 18

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது பொதுஜன பெரமுனவில் இருந்து ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார அந்தக் கட்சியிலிருந்து விலகியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் ஊடக சந்திப்பொன்றை நடத்தித் தமது தீர்மானத்தினை அவர் உத்தியோபூர்வமாக அறிவித்துள்ளார்.

அண்மையில் கட்சியில் இணைந்துகொண்ட பிரதிநிதிகளுக்கு நீதி வழங்காமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களை முன்வைத்து தாம் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய பட்டியல் உறுப்பினர் தெரிவின்போது, கடந்த தேர்தலில் எதிர்க்கட்சியினால் முன்னிலைப்படுத்தப்பட்ட முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும இணைத்துக் கொள்ளப்படவில்லை.

அவர்களுக்குத் தேவையானவர்களை மாத்திரம் தெரிவு செய்வதற்கு முயற்சிக்கின்றமை இதன் மூலம் தெளிவாகின்றது.

அவ்வாறானதொரு கட்சியிலிருந்து நாட்டுக்கும் பொது மக்களுக்கும் தொடர்ந்து சேவையாற்ற முடியாது.

பொதுத் தேர்தல் நிறைவடைந்து கடந்த ஒரு மாத காலமாக அவர்கள் முன்னெடுக்கும் விடயங்களை அவதானித்துக் கொண்டிருந்தேன்.

குறைந்த பட்சம் மனிதாபிமானத்துடன் செயற்படுவதைக் கூட அவதானிக்க முடியவில்லை.

ஆகவே, ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகி எதிர் வரும் காலங்களில் தாம் சுயா தீனமாக செயற்படவுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர் ஜகத் குமார தெரிவித்துள் ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வருடத்துக்குள் அரசு ஆட்சியை இழப்பது உறுதி

## கூறுகிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, டிசெ. 18

**அநுர அரசு ஒரு வருடத்துக்குள் ஆட்சியை இழப்பது உறுதி என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



இது தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்-போலி வாக்குறுதிகளை வழங்கி போலிக் கல்வித் தகைமைகளுடன் ஆட்சி அதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசு, ஒரு மாதத்துக்குள் சபாநாயகரை இழந்துள்ளது.

அதியுயர் சபையில் போலிக் கலாநிதிப் பட்டத்துடன் சபாநாயகர் கதிரை அலங்கரித்தவர், ஒரு மாதத்துக்குள் உண்மை நிலைமை வெளியில் தெரியவர பதவியில் இருந்து விலகியுள்ளார்.

தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தவர்கள் இனியாவது விழிப்படைய வேண்டும். ஒரு மாதத்துக்குள் சபாநாயகரை இழந்த அரசு, ஒரு வருடத்துக்குள் ஆட்சியை இழப்பது உறுதி. ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சி விரைவில் மலரும்-என்றார். (அ)

# வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியே தீருவோம்

## பிமல் ரத்நாயக்க உறுதி

கொழும்பு, டிசெ. 18

தேர்தலின்போது நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியே தீருவோம் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கொழும்பில் நேற்று அவர் மேலும் கூறியதாவது-ஜனாதிபதித் தேர்தலின்போதும், பாராளுமன்றத் தேர்தலின்போதும் நாம் வழங்கிய வாக்குறுதிகளைக் கட்டாயம் நிறைவேற்றுவோம். இரண்டு தேர்தல்களிலும் தேசிய மக்கள் சக்திக்கு மக்களின் அமோக ஆணை கிடைத்துள்ளது.

மாற்றத்தை விரும்பிய மக்கள், எம்மை நம்பி வாக்களித்துள்ளார்கள். நாம் முன்வைத்த கொள்கைத் திட்டங்களை ஏற்றே எமக்கு அவர்கள் வாக்களித்துள்ளார்கள்.

எனவே, மக்களின் ஆணையை ஒருபோதும் உதாசீனம் செய்யமாட்டோம். எதிரணியினர் எம் மீது சேறுபூசும் நடவடிக்கைகளில் ஈடுபட முயற்சிக்கலாம். ஆனால், நாம் உண்மையாக, நேர்மையாகச் செயற்படுவதால் எதற்கும் அஞ்சமாட்டோம்-என்றார். (அ)

# புளியின் விலை உயர்வு

கொழும்பு, டிசெ. 18

நாட்டில் புளியின் விலை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு கிலோ கிராம் புளியின் மொத்த விற்பனை விலை ஆயிரம் ரூபா வரை அதிகரித்துள்ளதாக வர்த்தக நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலர் வலயங்களில் புளி விளைச்சல் காணப்படும் நிலையிலும் புளியின் மொத்த விலை உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மொத்த விலை அதிகரிப்பு காரணமாக 100 கிராம் எடையுடைய புளியின் சில்லறை விலை 150 ரூபாவாக உயர்வடைந்துள்ளது.

இதன்படி ஒரு கிலோ கிராம் புளியின் சில்லறை விலை 1500 ரூபா எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தைக்கு போதியளவு புளி கிடைக்கப் பெறாத காரணத்தினால் இவ்வாறு விலை அதிகரிப்பு பதிவாகி உள்ளதாக வர்த்தக மத்திய நிலைய வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன. (அ)

# தொழிலுக்காக வெளிநாடுகளுக்கு செல்வோரின் எண்ணிக்கை உயர்வு

கொழும்பு, டிசெ. 18

2024ஆம் ஆண்டு வெளிநாட்டு வேலைகளுக்காக புலம்பெயர்ந்த இலங்கையர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்தைத் தாண்டியுள்ளதுடன், இந்த வருடம் டிசெம்பர் மாதம் 13ஆம் திகதி வரை 300,162 பேர் வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களுக்காக புலம்பெயர்ந்துள்ளனர் என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் புலம் பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்தையும் தாண்டியுள்ளது இது இரண்டாவது முறையாகும், இதற்கு முன்னர், 2022 ஆம் ஆண்டில் 310,948 தொழிலாளர்கள் வெளிநாட்டு வேலைகளுக்காக புலம்பெயர்ந்துள்ளனர்.

2024 ஆம் ஆண்டில், 177,804 ஆண்களும், 122,358 பெண்களும் வெளிநாட்டு வேலைகளுக்காக புலம்பெயர்ந்துள்ளனர்.

குறித்த காலப்பகுதியில் வெளிநாடு சென்றவர்களின் மொத்த எண்ணிக்கையில், 40.7 வீதமான பெண்களும், 60 வீதத்துக்கும் அதிகமான ஆண்களும் உள்ளடங்குவர். (அ)

# சீன பெண்கள் சம்மேளனத்தின் உப தலைவி பிரதமருடன் பேச்சு

கொழும்பு, டிசெ. 18

அனைத்து சீன பெண்கள் சம்மேளனத்தின் துணைத் தலைவியான சாங் டோங்மேய், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை பிரதமர் அலுவலகத்தில் சந்தித்து, பெண்கள் வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான பரஸ்பர முயற்சிகள் குறித்து கலந்துரையாடினார்.

சாங் டோங்மேய் மற்றும் அவரது தூதுக்குழுவினரை வரவேற்ற பிரதமர் கலாநிதி அமரசூரிய, இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நீடித்த நட்புறவைப் பாராட்டினர்.

இந்த கலந்துரையாடல் பெண்களின் சுகாதாரம், கல்வி மற்றும் பொருளாதாரப் பங்கேற்பு ஆகியவற்றில் பகிரப்பட்ட சவால்கள் மற்றும் வாய்ப்புகளை மையமாகக் கொண்டிருந்தது. பெண்களின் தொழிற்படை ஈடுபாடு மற்றும் கீழ்மட்ட பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது உட்பட சீனாவின் முன்னேற்றங்கள் குறித்து சாங் டோங்மேய் விளக்கினார்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் ஜென்ஹாங் உட்பட இலங்கை சீனத் தூதரகத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் இலங்கைக் குழுவில் பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, பிரதமரின் மேலதிக செயலாளர் சாகரிகா போகஹவத்த, வெளியுறவு அமைச்சின் கிழக்கு ஆசியாவிற்கான பணிப்பாளர் நாயகம் ருவந்தி தெல்பிட்டிய மற்றும் கிழக்கு ஆசியப் பிரிவின் பணிப்பாளர் உதானி குணவர்தன ஆகியோர் பங்குபற்றினர்.

# கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் கைது!

கொழும்பு, டிசெ. 18

பதுளை, மஹியங்கனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வதகஹதோவ பிரதேசத்தில் கடந்த 02 ஆம் திகதி 44 வயதுடைய நபர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 36, 44 மற்றும் 51 வயதுடைய கொடபோருவத்த பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

சம்பவத்தன்று, கொலை செய்யப்பட்டவர் மூன்று சந்தேக நபர்களுடன் இணைந்து காளான் பறித்துக் கொண்டிருந்துள்ளார்.

இதன்போது, சந்தேக நபர்களில் ஒருவர் கொலை செய்யப்பட்டவரை உள்நாட்டுத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்துள்ளார்.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# மின் துண்டிப்பு நடவடிக்கையை அதிகரித்துள்ளது மின்சார சபை

கொழும்பு, டிசெ. 18

நாட்டில் மின்சாரம் துண்டிக்கும் சம்பவங்கள் கடுமையாக அதிகரித்துள்ளதாக மின்சாரம் பயன்படுத்துவோர் சங்கம் தெரிவித்துள்ளது.

2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை மின்சாரம் துண்டிப்புகள் வேகமாக அதிகரித்து வருவதாக சங்கத்தின் தேசிய செயலாளர் சஞ்சீவ தம்மிக்க தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையின் தரவுகளின்படி 2023 ஆம் ஆண்டுக்குள் உரிய நேரத்தில் பணம் செலுத்தாமையால் 970,933 மின்சாரம் துண்டிப்புகள் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

2024ஆம் ஆண்டின் ஜனவரி முதல் ஜூன் வரை 6,28,286 மின்சாரம் துண்டிப்புகள் செய்யப்பட்டுள்ளதாகவும், 505,949 வீடுகள், 8,579 தொழிற்சாலைகள், 2,090 வழிபாட்டுத் தலங்கள், 39 ஹோட்டல்கள், 359 பொதுத்துறை நிறுவனங்கள், கடைகள் மற்றும் 111,276 மற்றவை அடங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு நாள் ஒன்றுக்கு 2,660 மின்சாரம் துண்டிப்புகள் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த ஆண்டு சராசரியாக 3,443 மின்சாரம் துண்டிப்புகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மின்சார சபையின் தரவுகள் சரியாக இல்லாத காரணத்தினால் மின்கட்டண அதிகரிப்பால் அநாதரவாக இருந்த மக்களுக்கு இவ்வருடம் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

மின்சார சட்டத்தை மீறி இலங்கை மின்சார சபை பெரும் இலாபம் ஈட்டியுள்ளது. எனினும் வாடிக்கையாளர் அடமானம் வைத்து கூட கட்டணங்களை செலுத்த வேண்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மின் சார பாவனையாளர்கள் தமது தோட்டத்தில் உள்ள பச்சை இலைகளை கூட விற்பனை செய்து இந்த கட்டணங்களை செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மின்சார பாவனையாளர்கள் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க மேலும் கூறினார். (அ)

# புதிய சபாநாயகருக்கு ரிஷாத் வாழ்த்து

கொழும்பு, டிசெ. 18

10ஆவது பாராளுமன்றத்தின் புதிய சபாநாயகராக நியமிக்கப்பட்டுள்ள வைத்திய கலாநிதி ஜகத் விக்கிரமரத்னவுக்கு, ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவருமான ரிஷாத் பதியுதீன் கட்சி சார்பாக வாழ்த்து தெரிவித்தார். (அ)

# 'ஜனாதிபதி அன்பளிப்பு' எனும் பெயரில் பரவும் போலி செய்தி

## மக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 18

'ஜனாதிபதி அன்பளிப்பு' என்ற அரசாங்க உதவித் திட்டம் குறித்த போலி செய்தி ஒன்று, தற்போது சமூக ஊடகங்களில் பரவி வருவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எனினும், அரசாங்கத்தின் எந்தவொரு முடிவும் அரசாங்கத்தின் அதிகாரப்பூர்வ ஊடக சந்திப்புகள் மூலம் மட்டுமே அறிவிக்கப்படும்.

எனவே, இதுபோன்ற செய்திகள் தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களம் எச்சரிக்கையை விடுத்துள்ளது.

அதேநேரம், சமூக ஊடக பயனர்களும் இதுபோன்ற தவறான தகவல்களை, அடுத்தவர்களுக்கு பகிர்வதை நிறுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலிக்காய்ச்சல் நோய் தொடர்பில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு!

காரைதீவு, டிசெ. 18

**எலிக்காய்ச்சல் நோய்த்தாக்கம் தொடர்பில் விவசாயிகளுக்கும், மக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி தஸ்லிமா வசீர் தலைமையில் களப்பணி மேற்கொள்ளப்பட்டது.**



இதன்போது, மக்களை விழிப்பூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் ஓர் அங்கமாக எலிக்காய்ச்சலுக்கு மனிதர்கள் ஏன் பயப்பட வேண்டும். வடமாகாணத்தின் பல பகுதிகளிலும் அதிகரித்த எண்ணிக்கையில் சடுதியாக மர்மக் காய்ச் சல் ஒன்று பரவி வருவதாக செய்திகள் அண்மைய நாட்களில் வெளிவந்திருந்தன. இந்த காய்ச்சல் ஒரு வகை பக்றீரியா மூலம் பரவுவதால் லெப்டோஸ் பிரோசிஸ் என்று இந்த நோய் அழைக்கப்படுகிறது.

சிறு விலங்குகள் குறிப்பாக எலியின் சிறுநீர் மூலம் மனிதர்களுக்கு பரவும் நோயாகும்.

எனவே, வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களின் பின்னர் குளம், நீர்நிலைகளில் குளிப்பதை தவிர்த்தல், வெள்ளம் பார்க்க செல்வதை தவிர்த்தல், கொதித்து ஆறிய சுத்தமான நீரை பருகுதல், காயங்களை மூடி பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற் கொள்வதன் மூலமாக இந்த நோய் தொற்றுவதில் இருந்து பாதுகாப்பு பெற முடியும். அதிக காய்ச்சல், தலைவலி, உடல் வலி, கண் மஞ்சளாதல் போன்ற அறிகுறிகள் இருந்தால் தாமதிக்காமல் அருகில் உள்ள மருத்துவமனைக்கு சென்று வைத்திய ஆலோசனை பெற்றுக் கொள்வது மிகவும் அவசி யம் என்றும் எலிக்காய்ச்சல் குறித்து தெரிந்து கொள்ள, இலவசமாக தடுப்பு மருந்துகளை பெற்றுக் கொள்ள உங்கள் பிரதேசத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளை அல்லது மருத்துவமனைகளை நாட முடி யும் என காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் அறிவித்தல் வெளியிட்டுள்ளது. (எ)

# தொழிற்பயிற்சி நிலையத்தின் 3 ஆவது ஆண்டு நிறைவு விழா



வாழைச்சேனை, டிசெ.18

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினமும் தொழிற்பயிற்சி நிலையத்தின் 3 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் சமூக சேவை திணைக்களத்தின் கீழ் இயங்கும் வாழைச்சேனை - கும்புறுமூலை மாற்றுத்திறனாளிகள் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

வாழ்க்கை தொழிற்பயிற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி ஜி. சுகந்தினி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சமூக சேவைகள் திணைக்கள மேலதிக செயலாளர் நாளிகா, பணிப்பாளர் தர்சினி கருணாரட்ன மற்றும் வன்னிகோப் நிறுவனத்தின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்துக்கான இணைப்பாளர் கெ. தர்மராஜ் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இதன்போது விருந்தினர்களால் சமாதான புறாக்களும் பறக்கவிடப்பட்டன.

அத்தோடு, நிலையத்தின் 3 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

மாணவர்களின் ஆடை அலங்கார நிகழ்வும், தேசிய மட்ட போட்டியில் 4 ஆவது இடத்தை பெற்ற நடன நிகழ்வும் நடைபெற்றன.

அத்துடன் மாணவர்களுக்கு பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன. (எ)

# அம்பாறையில் 34 ஆவது மத்தியஸ்த தின நிகழ்வு



கல்முனை, டிசெ.18

அம்பாறை மாவட்டத்தில் 34 ஆவது தேசிய மத்தியஸ்த தின நிகழ்வு சிறப்பான முறையில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

கடந்த 25 வருடங்களுக்கு மேலாக மத்தியஸ்த சபையில் கடமையாற்றியவர்கள் தெரிவு செய்யப்பட்டு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

மேலும் மத்தியஸ்த சபைகளின் செயல்பாட்டை வலுவடையச் செய்யும் நோக்கில் நீதி அமைச்சின் ஆலோசனைக்கு அமைய மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவால் ஒவ்வொரு மாட்டங்களிலும் இந்த நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (எ)

அமைச்சரவைக்கு தகுதி இல்லை என்று

# முஸ்லிம்களை புறக்கணித்தவர்கள் இப்போது என்ன கூறப்போகின்றனர்?

திருகோணமலை, டிசெ.18

தகுதி இல்லை என்று அமைச்சரவை நியமனத்தில் முஸ்லிம்களை புறக்கணித்தவர்கள், கலாநிதிப் பட்டம் தொடர்பில் மக்களுக்கு என்ன பதில் வழங்கப்போகின்றனர் என்று திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கேள்வி எழுப்பியுள்ளார்.

கிண்ணியாவில் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

மேலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பொருளாதாரம் முற்றாக முடக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் கடற்றொழில், விவசாயம், வீட்டுத் தோட்டங்களை ஈம்பி மக்கள் வாழ்கின்றனர்.

இந்த அரசாங்கம் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் மாற்றங்களை கொண்டு வருவார்கள் என்ற நம்பிக்கையில் மக்கள் தெரிவு செய்த போதிலும் சீரற்ற கால நிலையால் பாதிக்கப்பட்ட மக்களை கூட கவனிக்கவில்லை. எனவே, இந்த அரசாங்கத்திடம் நான் கோரிக்கையாக முன்வைப்பது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களையும் நஷ்டஈடுகளையும் உடன் வழங்க வேண்டும்.

நாட்டில் பல மாற்றங்களை ஏற்படுத்துவார்கள் என்ற நம்பிக்கையில் மக்கள் வாக்களித்தனர்.

ஆனால், மக்களுக்கு ஏமாற்றம் மாத்திரமே எஞ்சியுள்ளது.

தேர்தல் காலங்களில் புதியவர்களை, திறமையானவர்களை, படித்தவர்களை தெரிவு செய்வோம் எனக் கூறிய போதிலும், சபாநாயகரின் கலாநிதிப் பட்டம் தொடர்பில் அவர்களே நம்பிக்கையிழந்துள்ளனர். மக்களை ஏமாற்றியுள்ளனர். இன்னும் எதை எதையெல்லாம் சொல்லி ஏமாற்றப்போகின்றார்களோ தெரியவில்லை என்று மக்கள் அதிருப்திக்குள்ளாகியுள்ளனர்.

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த அரசாங்கம் உதவும் என்று எதிர்பார்த்த போதும் அதுவும் நடைபெறவில்லை. இந்த அரசாங்கத்தின் செயல்பாடு மக்களுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது- என்றார். (எ)

# சுகாதாரத் துறையில் சிறந்து விளங்கிய நிறுவனங்கள் விருது வழங்கி கௌரவிப்பு

கல்முனை, டிசெ.18

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஏற்பாடு செய்த பிராந்தியத்தின் சுகாதார துறையில் சிறந்து விளங்கிய சுகாதார நிறுவனங்களை பாராட்டி சான்றிதழ், விருது வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் பிரதான மண்டபத்தில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்றது.



இந்த நிகழ்வின்போது 2024 ஆம் ஆண்டில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் பொதுமக்களுக்கு சிறந்த சுகாதார சேவையை வழங்கி வருகின்ற நிறுவனங்களை மதிப்பீடு செய்து பாராட்டி கௌரவிக்கப்பட்டதுடன் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொண்ட பிரதேச மருத்துவமனைகளுக்கும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

இதில் முதல் இடத்தை பாலனை பிரதேச மருத்துவமனை பெற்றுக் கொண்டதுடன், இரண்டாம் மூன்றாம் இடங்களை சாய்ந்தமருது மற்றும் அக்கரைப்பற்று பிரதேச மருத்துவமனைகள் பெற்றுக் கொண்டன.

இதேவேளை ஆரம்ப சுகாதார சேவையை வலுப்படுத்தும் செயல் திட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு பங்களிப்புச் செய்த சுகாதார நிறுவனங்கள் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகளும் சான்றிதழ் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். (எ)

# காதி நீதிவான் ஒருவரை நிரந்தரமாக நியமியுங்கள்

**ஜனாதிபதியிடம் கோரிக்கை**

கிண்ணியா, டிசெ.18

கிண்ணியா பிரதேசத்துக்கு நிரந்தர காதி நீதிவான் ஒருவரை நியமிக்கக் கோரி, ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கிண்ணியா சிரேஷ்ட பிரஜைகள் சங்கத்தால் இந்த மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில், கடந்த 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கிண்ணியா உட்பட நாட்டின் பல பிரதேசங்களில் உள்ள காதி நீதிமன்றங்களில் நிழவும் காதி நீதிபதிகள் வெற்றிடங்களுக்காக நீதிச்சேவை ஆணைக் குழுவால் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

இருப்பினும், ஒரு வருடத்தைக் கடந்துள்ளபோதிலும் நியமனங்களை வழங்குவதற்கு இதுவரை எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படாமையால், கிண்ணியா பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வாழும் கிண்ணியா காதி நீதிமன்றப் பிரிவில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன.

எனவே, மக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்களை கருத்தில்கொண்டு, நிரந்தர காதி நீதிவான் ஒருவரை நியமிக்க, துரித நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்று அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே நீடிக்கும் போர்

# காஸாவில் பலி எண்ணிக்கை 45 ஆயிரத்தைத் தாண்டியது!

காஸா, டிசெ. 18

**இஸ்ரேல் - ஹமாஸ் இடையே 14 மாதங்களாக நீடிக்கும் போரில் காஸா முனையில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 45 ஆயிரத்தை தாண்டியதாக பலஸ்தீன சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.**

கொல்லப்பட்டவர்களில் பொதுமக்கள் எத்தனை பேர், ஹமாஸ் அமைப்பினர் எத்தனை பேர்? என்று கூறப்படவில்லை. ஆனால், இறந்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அதேசமயம், 17, 000இற்கும் மேற்பட்ட ஹமாஸ் போராளிகளை கொன்றதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

போர் தொடங்கியதில் இருந்து இதுவரை 45, 028 பேர் கொல்லப்பட்டதாகவும், 106,962 பேர் காயமடைந்ததாகவும் பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இடிபாடுகளுக்கு அடியில் அல்லது மருத்துவ ஊழியர்கள் செல்ல முடியாத பகுதிகளில் ஆயிரக்கணக்கான உடல்கள் இன்னும் புதையுண்டிருப்பதால் பலி எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்புக்கும் இடையே நீண்டகாலமாக மோதல் இருந்தாலும், இப்போது இடம்பெறும் போரானது மிகக்கொடியதாக மாறியுள்ளது. போருக்கு முன்பு காஸாவில் 23 இலட்சம் மக்கள் இருந்த நிலையில், போரில் 2 சதவீதம் பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## சட்டவிரோத அடக்குமுறையை இனி ஏற்றுக்கொள்ள முடியாது

அமெரிக்காவுக்கு சீனா எச்சரிக்கை



வாஷிங்டன், டிசெ.18

சீனாவின் உள்துறை விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுவதையும், சட்டவிரோதமாக அடக்குமுறையை கையாள்வதையும் சீன அரசு இனியும் ஏற்றுக்கொள்ளாது என்று அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் வாங் யீ தெரிவித்துள்ளார்.

“சீனா தனது இறையாண்மை, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி சார்ந்த நலன்களை உறுதியுடன் பாதுகாக்கிறது. எனவே, சீனா மீது சட்டவிரோதமான முறையில் அமெரிக்கா அடக்குமுறையை கையாள்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. குறிப்பாக தாய்வான் உள்ளிட்ட சீனாவின் உள்துறை சார்ந்த பிரச்னைகளில் அமெரிக்கா தலையிடுவதை சீனா எதிர்க்கிறது”- என்றார். (எ)

## நம்பிக்கை வாக்கெடுப்பில் ஜேர்மன் ஜனாதிபதி தோல்வி



பெர்லின், டிசெ.18

நம்பிக்கை வாக்கெடுப்பில் ஜேர்மனி ஜனாதிபதி ஓலாப் ஸ்கால்ஸ் தோல்வியடைந்தார்.

ஐரோப்பிய யூனியனில் அதிக மக்கள் தொகை கொண்ட உறுப்பு நாடும், மிகப்பெரிய பொருளாதார தேசமுமாக விளங்குவது ஜேர்மனி. அங்கு பொருளாதாரம் தேக்கமடைந்த நிலையில், கடந்த நவம்பரில் நிதி அமைச்சரை ஜனாதிபதி ஓலாப் ஸ்கால்ஸ் பதவி நீக்கம் செய்தார். இது சர்ச்சையானது. கூட்டணி கட்சிகள் ஆதரவை வாபஸ் பெற்றன. இதையடுத்து ஆளுங்கட்சி அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

இந்த நிலையில், நம்பிக்கை வாக்கெடுப்பில் ஜனாதிபதி ஓலாப் ஸ்கால்ஸ் தோல்வியடைந்தார். 733 இடங்களைக் கொண்ட கீழ்சபையில் (பன்டேஸ்டாக்) 207 உறுப்பினர்களின் ஆதரவை ஸ்கால்ஸ் பெற்று தோல்வியை சந்தித்தார். அதே நேரத்தில் 394 பேர் அவருக்கு எதிராக வாக்களித்தனர், 116 பேர் வாக்களிப்பை புறக்கணித்தனர். இதனால் அவர் வெற்றி பெற தேவையான 367 பெரும்பான்மையை விட மிகக் குறைவாகவே பெற்றிருந்தார்.

இதனால் அடுத்த வருடம் பெப்ரவரி மாத இறுதியில் முன் கூட்டியே தேர்தலை நடத்த வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. (எ)

## துணை பிரதமர் இராஜினாமா ஜஸ்டின் அரசுக்கு பின்னடைவு

ஒட்டாவா, டிசெ. 18

கனடா நாட்டின் துணை பிரதமர் கிறிஸ்டியா பிரீலேண்ட் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அமெரிக்காவின் ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள டொனால்ட் ட்ரம்ப், சமீபத்தில் வெளியிட்ட அறிவிப்பில் கனடாவில் இருந்து அமெரிக்காவுக்குள் இறக்குமதியாகும் அனைத்துப் பொருட்களுக்கும் 25 சதவீதம் வரி விதிக்கத் திட்டமிட்டுள்ளதாக தெரிவித்தார். கனடாவில் இருந்து சுமார் 75 சதவீத ஏற்றுமதி வர்த்தகம் அமெரிக்காவுடன் மட்டுமே நடைபெறும் நிலையில், ட்ரம்பின் இந்த அறிவிப்பு கனடாவின் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், கனடா நாட்டின் துணை பிரதமர் கிறிஸ்டியா பிரீலேண்ட் தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார். அத்தோடு, நிதி அமைச்சர்



பதவியையும் அவர் இராஜினாமா செய்துள்ளார். இது தொடர்பில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், கனடா தற்போது ஒரு மிகப்பெரிய சவாலை சந்தித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். கனடாவின் எதிர்காலம் தொடர்பான திட்டங்களில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கும், தனக்கும் இடையே பல வேறு கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், ஜஸ்டின் ட்ரூடோ தன்னை வேறு துறைக்கு மாற்ற வேண்டும் என்று விரும்புகின்றார். எனவே, அவரின் அமைச்சரவையில் இருந்து விலகுவதே நேர்மையான மற்றும் சாத்தியமான ஒரே வழி என்று முடிவு செய்ததாக கிறிஸ்டியா தெரிவித்துள்ளார். அத்தோடு, அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடுவேன் என்றும் கிறிஸ்டியா கூறியுள்ளார். முன்னதாக கனடா அரசின் வீட்டு வசதி துறை அமைச்சர் சீயன் பிரேசர் இராஜினாமா செய்தார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் கனடாவில் உள்ள கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் பியரி பாய்லெவ்ரே இதுவரை 3 முறை ஆட்சியை கவிழ்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இதனிடையே, லிபரல் கட்சியின் தலைவர் ஜஸ்டின் ட்ரூடோவிற்கான ஆதரவு கணிசமாக குறைந்து வருவதாக கருத்துக் கணிப்புகள் கூறி வரும் நிலையில், தற்போது துணை பிரதமர் இராஜினாமா செய்திருப்பது ட்ரூடோ அரசுக்கு ஏற்பட்டுள்ள பெரும் பின்னடைவாக பார்க்கப்படுகிறது. (எ)

## அடுத்த ஆண்டு இறுதியில் பங்களாதேஷில் தேர்தல்?

தலைமை ஆலோசகர் யூனுஸ் தகவல்

டாக்கா, டிசெ.18

பங்களாதேஷில் அடுத்த ஆண்டின் இறுதியில் அல்லது 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தேர்தல் நடைபெறலாம் என்று அந்த நாட்டின் தலைமை ஆலோசகர் முகம்மது யூனுஸ் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுடனான போரில் வெற்றி பெற்ற தினத்தை முன்னிட்டு தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு அவர் உரையாற்றினார். அப்போது, “தேவையான சீர்திருத்தங்களை நிறைவேற்றிய பிறகு அடுத்த பொதுத் தேர்தலை 2025இன் இறுதி அல்லது 2026இன் முதல் பாதிக்குள் நடத்த முடியும். அனைத்து முக்கிய சீர்திருத்தங்களையும் முடித்து விட்டு அதன் பிறகு தேர்தலை நடத்த அனைவரிடமும் வேண்டுகோள் விடுக்கிறேன்.

தற்போது தேர்தல் சீர்திருத்த ஆணைக்குழு மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த ஆணைக்குழு ஆகியவற்றின் பரிந்துரைகளை பொறுத்தே தேர்தலுக்கான காலக்கெடு அமையும். எனினும், அரசியல் கருத்தொற்றுமை காரணமாக,



சிறிய அளவிலான சீர்திருத்தங்களுடன் குறைபாடற்ற வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் தேர்தலை நடத்த வேண்டும் என்றால், 2025ஆம் ஆண்டின் இறுதியில் தேர்தலை நடத்துவது சாத்தியமாகும்.

அதேநேரத்தில், எதிர்பார்க்கும் அளவுக்கு தேர்தல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அதன் பிறகு தேர்தல் நடத்தப்படலாம் என்றால் அதற்கு கூடுதலாக 6 மாதங்கள் ஆகலாம். ஏனெனில், தேர்தல் சீர்திருத்தங்களை முழு அளவில் மேற்கொள்ள வேண்டுமானால், தேர்தல் சீர்திருத்த ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் தேசிய ஒருமித்த கருத்துகளின் அடிப்படையிலேயே அதனை செய்ய முடியும்”- என்றார். (எ)

## அமெரிக்காவில் துப்பாக்கிச்சூடு! மூவர் பலி, இருவர் கவலைக்கிடம்

ஜனாதிபதி பைடன் கடும் கண்டனம்

விஸ்கான்ஸின், டிசெ. 18

அமெரிக்காவின் விஸ்கான்ஸின் மாகாணத்தில் பாடசாலையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் மூவர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவத்துக்கு ஜனாதிபதி ஜோ பைடன் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

விஸ்கான்ஸினில் உள்ள மேடிசன் நகரில் உள்ள பாடசாலைக்குள் நுழைந்த சிறுவன் ஒருவன் சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினான். இதில் ஆசிரியர் ஒருவரும், சிறுவனின் சக மாணவர் ஒருவரும் உயிரிழந்தனர். 6 பேர் காயமடைந்தனர். துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட சிறுவனும் சம்பவ இடத்தில் சடலமாக மீட்கப்பட்டான்.

“இந்தச் சம்பவத்தில் [illegible] கொல்லப்பட்டனர். சந்தேக நபரும் உயிரிழந்தார். இரண்டு மாணவர்களுக்கு உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய கடுமையான காயம் ஏற்பட்டுள்ளது. காயமடைந்தவர்களில் இருவர் மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பியுள்ளனர்”- என பொலிஸார் கூறினர்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இந்தத் துப்பாக்கிச் சூடு சம்பவத்துக்குக் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இது குறித்து ஜனாதிபதி ஜோ பைடன் வெளியிட்ட கண்டன அறிக்கையில், “

நாம் நமது குழந்தைகளை துப்பாக்கிக் கலாசாரத்திலிருந்து பாதுகாக்க முடியாததை ஏற்றுக் கொள்ள முடியாதது. வகுப்பறையில் பாதுகாப்பாக உணர்வது குழந்தைகளின் உரிமை.

நம் குழந்தைகள் பாடசாலையில் வாசிப்பையும், எழுதுவதையும் கற்றுக் கொள்ள வேண்டுமே தவிர எப்படி துப்பாக்கிச் சூட்டிலிருந்து தற்காத்துக் கொள்வது என்றல்ல.

குழந்தைகளை மனரீதியாக முடக்கும், பெற்றோர்களை அச்சத்தில் ஆழ்த்தும், சமூகத்தில் பிளவை ஏற்படுத்தும் இத்தகைய வன்முறைகளை அனுமதிக்க முடியாது” என்று தனது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார்.

அமெரிக்காவில் இந்த ஆண்டு மட்டும் 322 துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் பாடசாலையில் நிகழ்ந்துள்ளன. 1966 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஒரே ஆண்டில் இத்தனை துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் நடந்தது இதுவே முதன்முறையாகும். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து இமாலய வெற்றி!

## தொடரை கைப்பற்றியது இங்கிலாந்து




ஹாமில்டன், டிசெ.18

இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து 423 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இமாலய வெற்றி பெற்றது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் இரு போட்டிகளில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரை ஏற்கனவே கைப்பற்றிவிட்டது. இந்த நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டி ஹாமில்டனில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து தனது முதல் இன்னிங்ஸில் 347 ஓட்டங்கள் சேர்த்தது. தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து 143 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதையடுத்து 204 ஒட்டங்கள் முன்னிலையுடன் தனது 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய நியூசிலாந்து 453 ஓட்டங்கள் குவித்தது. நியூசிலாந்து தரப்பில் அதிகபட்சமாக கேன் வில்லியம்சன் 156 ஓட்டங்கள் எடுத்தார். இங்கிலாந்து தரப்பில் ஜேக்கப் பெத்தேல் 3 விக்கெட்கள் வீழ்த்தினார். இதையடுத்து நியூசிலாந்து முதல் இன்னிங்ஸில் பெற்ற முன்னிலையுடன் சேர்த்து இங்கிலாந்துக்கு 658 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது. தொடர்ந்து தனது 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து நேற்று முன்தினம் 3ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட்கள் இழந்து 18 ஓட்டங்கள் எடுத்திருந்தது.


இந்த நிலையில், 4ஆம் நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. இதில் ஜேக்கப் பெத்தேல், ஜோ ரூட் இருவ



ரும் நிதானமாக விளையாடி ஓட்டங்கள் சேர்த்தனர். இருவரும் அரைச்சதம் அடித்து அசத்தினர். இதில் ஜேக்கப் பெத்தேல் 76 ஓட்டங்களிலும், ஜோ ரூட் 54 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து களமிறங்கிய இங்கிலாந்து அணியினர் சொற்ப ஓட்டங்களில் அடுத்தடுத்து விக்கெட்களை இழந்தனர். இறுதியில் இங்கிலாந்து தனது 2ஆவது இன்னிங்ஸில் 234 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. அந்த அணி தரப்பில் அதிகபட்சமாக ஜேக்கப் பெத்தேல் 76 ஓட்டங்கள் எடுத்தார். நியூசிலாந்து தரப்பில் சாண்ட்னர் 4 விக்கெட்கள் வீழ்த்தினார். இதன் மூலம் நியூசிலாந்து 423 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆறுதல் வெற்றியை பதிவு செய்தது. இந்த போட்டியில் தோல்வியடைந்தாலும் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2 - 1 என்ற கணக்கில் இங்கிலாந்து கைப்பற்றியது. (எ)

# ஓய்வு பெற்றார் ரிம் சவுதி




ஹாமில்டன், டிசெ.18

நியூசிலாந்து அணியின் முன்னணி வீரரான ரிம் சவுதி, சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட் டியில் இருந்து ஓய்வு பெற்றார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது போட்டியில் அபாரமாக செயல்பட்ட நியூசிலாந்து 423 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த டெஸ்ட் தொடருடன் சர்வ தேச டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து நியூசிலாந்து முன் னணி வீரரான ரிம் சவுதி ஓய்வு பெற்றார். இவர் நியூசி லாந்து அணிக்காக கடந்த 2008ஆம் ஆண்டு அறிமுகம் ஆனார். அந்த அணிக்காக 104 டெஸ்ட், 161 ஒருநாள் மற் றும் 125 ரி - 20 போட்டிகளில் விளையாடி உள்ளார். மேலும், இவர் 54 ஐ. பி. எல் போட்டிகளிலும் விளையாடி உள்ளார்.

முன்னணி வீரரான ரிம் சவுதியை நியூசிலாந்து அணியினர் வெற்றியுடன் வழி அனுப்பி வைத்தனர். ரிம் சவுதி ஓய்வு பெற்றதை அடுத்து அவருக்கு பல்வேறு தரப்பினர் தங்களது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து வருகின்றனர். (எ)

# 9 விக்கெட் இழப்புக்கு 252 ஓட்டங்கள் சேர்ப்பு

## இந்தியாவுக்கு ஆஸி கடும் நெருக்கடி

பிரிஸ்பேன், டிசெ.18

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியில் இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்களை இழந்து 252 ஓட்டங்கள் எடுத்தது.

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் இடையிலான 3ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பிரிஸ்பேனில் உள்ள மைதானத்தில் நடைபெற்று வருகிறது. மழையால் பாதிக்கப்பட்ட இந்த ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 117.1 ஓவர்களில் 445 ஓட்டங்கள் குவித்தது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக ட்ராவிஸ் ஹெட் 151 ஓட்டங்களும், ஸ்டீவ் ஸ்மித் 101 ஓட்டங்களும் எடுத்தனர். இந்திய தரப்பில் பும்ரா 6 விக்கெட்களை கைப்பற்றினார்.

இதனைத் தொடர்ந்து இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வருகிறது. தொடக்க ஆட்டக்காரர்களாக ஜெய்ஸ்வாலும், கே.எல். ராகுலும் களமிறங்கினர். இதில் ஜெய்ஸ்வால் 4 ஓட்டங்களிலும், அடுத்து வந்த கில் ஓர் ஓட்டத்துடனும், விராட் கோலி 3 ஓட்டங்களுடனும், ரிஷப் பண்ட் 9 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிவில் கே. எல். ராகுல் 33 ஓட்டங்களுடனும், ரோஹித் ஓட்டம் எடுக்காமலும் களத்தில் இருந்தனர்.

இந்த நிலையில், நேற்று 4ஆம் நாள் ஆட்டம் நடைபெற்றது. இதில் ரோஹித் 10 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து ராகுலுடன் ஜடேஜா ஜோடி சேர்ந்தார். இருவரும் நிதானமாக விளையாடி ஓட்டங்கள் சேர்த்தனர். இதில் ராகுல் 84 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய நிதிஷ் குமார் ரெட்டி 16 ஓட்டங்களிலும், முகமது சிராஜ் ஓர் ஓட்டத்துடனும் ஆட்ட மிழந் தனர். இதை யடுத்து ஜடே ஜாவு டன் பும்ரா ஜோடி சேர்ந் தார். நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த ஜடேஜா அரைச்சதம் அடித்த நிலையில் 77 ஓட்டங்களில் ஆட்ட மிழந்தார். இதனால் இந்திய அணி 213 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்களை இழந்தது.

இறுதியில் 4ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்களை இழந்து 252 ஓட்டங்கள் எடுத்தது. இந்திய தரப்பில் பும்ரா 10 ஓட்டங்களுடனும், ஆகாஷ் தீப் 27 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இந்தியா இன்னும் 193 ஓட்டங்கள் பின்னிலையில் உள்ளது. நாளை 5ஆம் நாள் ஆட்டம் நடைபெறுகிறது. இந்த போட்டியில் இன்னும் ஒரு நாளே எஞ்சியுள்ளதால் இந்த ஆட்டம் சமநிலையில் முடிய வாய்ப்புள்ளது. (எ)

# தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார் டேரன் சமி

ஜமைக்கா, டிசெ.18

மேற்கு இந்திய தீவுகள் அணியின் தலைமைப் பயிற்சியாளராக டேரன் சமி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மேற்கு இந்திய தீவு கள் கிரிக் கெட் அணி யின் புதிய தலைமைப் பயிற்சியா ளராக முன் னாள் வீரர் டேரன் சமி நியமனம் செய்யப்பட் டுள்ளார். அடுத்த ஆண்டு ஏப்ரல் முதல் அவர் பொறுப் பேற்கவுள் ளார் என தகவல் வெளி யாகியுள் ளது. இது தொடர்பில்



செயின்ட் வின் சென்ட் டில் நடந்த காலாண்டு செய்தியாளர் சந்திப்பில் மேற்கு இந்திய தீவுகளின் கிரிக்கெட் இயக்குநர் மைல்ஸ் பாஸ்கோம்ப் இதுதொடர்பான அறிவிப்பை வெளியிட்டார். டேரன் சமி, கடந்த 2023 ஆம் ஆண்டு ஒருநாள் மற்றும் ரி - 20 அணிகளுக்கான தலைமைப் பயிற்சியாளராகப் பொறுப்பேற்றார். முன்னதாக 2014 மற்றும் 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற ரி -20 உலகக் கிண்ணத் தொடரில் டேரன் சமி தலைமையிலான மேற்கு இந்திய தீவுகள் அணி ரி - 20 உலகக் கிண்ணத்தை வென்று சரித்திரம் படைத்தது. இதன் மூலம் ரி - 20 உலகக் கிண்ணத்தை இரண்டு முறை வென்ற ஒரே அணித் தலைவர் எனும் சாதனையை டேரன் சமி நிகழ்த்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டியலில் நியூசிலாந்து அணி முன்னேற்றம்

டுபாய், டிசெ.18

இங்கிலாந்துக்கு எதிராக நியூசிலாந்து அபார வெற்றி பெற்றதை அடுத்து உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ. சி. சி) வெளியிட்டுள்ளது. இந்தப் பட்டியலில் தென்னாபிரிக்கா (63. 33 சதவீதம்) முதலிடத்தில் நீடிக்கிறது. அவுஸ்திரேலியா (60.71 சதவீதம்) இரண்டாம் இடத்தில் உள்ளது. இந்தியா (57. 29 சதவீதம்) மூன்றாம் இடத்தில் தொடர்கிறது.

இங்கிலாந்துக்கு எதிரான வெற்றியின் மூலம் நியூசிலாந்து (48.21 சதவீதம்) 4ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளது. இதையடுத்து இலங்கை (45.45 சதவீதம்) 5ஆம் இடத்திலும், இங்கிலாந்து (43.18 சதவீதம்) 6ஆம் இடத்திலும் உள்ளன. தொடர்ந்து 7 முதல் 9 இடங்களில் முறையே பாகிஸ்தான் (33.33 சதவீதம்), பங்களாதேஷ் (31.25 சதவீதம்), மேற்கு இந்திய தீவுகள் (24.24 சதவீதம்) அணிகள் உள்ளன என்று ஐ. சி. சி. அறிவித்துள்ளது.(எ)

# ஜோஷ் ஹேசில்வுட் விலகல்

பிரிஸ்பேன், டிசெ.18

இந்தியாவுக்கு எதிராக நடைபெற்று வரும் 3ஆவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் முன்னணி வேகப் பந்துவீச்சாளரான ஜோஷ் ஹேசில்வுட் நேற்றைய ஆட்டத்தில் இருந்து இடையில் விலகியுள்ளார். அவருக்கு காலில் காயம் ஏற்பட்டதை அடுத்து அவர் மைதானத்தை விட்டு வெளியேறினார். அவர் இந்த போட்டியில் தொடர்ந்து பந்து வீச முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவரது காயம் [illegible] ஸ்கேன் [illegible] (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழகத்தில்...

தலைவராகப் பணியாற்றிய சஞ்சிதா சத்தியமூர்த்தி, வடக்கு மாகாண ஆளுநரை, ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடிய நிலையில் அவர் இதனை தெரிவித்தார்

கடந்த காலங்களில் வடக்கு மக்களுக்கு பல்வேறு வகையான உதவிகளை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் வழங்கியதை நினைவு கூர்ந்த ஆளுநர், அதற்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார்.

குறிப்பாக இந்தியாவின் தமிழக மாநிலத்தில் தங்கியிருந்த இலங்கை அகதிகள் நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகள் மற்றும் அவர்களுக்கான வாழ்வாதார உதவிகளை மேற்கொண்டதில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் பங்கு அளப்பரியது என்பதையும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் காணி இல்லாதவர்களுக்கு காணி வழங்குதல், வீடமைப்புத் திட்டம், வாழ்வாதார உதவி மற்றும் வேலை வாய்ப்பு என்பனவற்றை உறுதிப்படுத்தி தமிழகத்தில் தற்போதும் தங்கியுள்ள இலங்கை அகதிகளை மீள நாட்டுக்கு அழைத்து வருவதற்கான விருப்பத்தை வெளிப்படுத்திய ஆளுநர், அதற்குரிய திட்டங்களை தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் இதற்கான ஒத்துழைப்புக்களை எதிர்பார்ப்பதாகவும் ஆளுநர் தெரிவித்துள்ளார். (அ)

## எலிக்காய்ச்சல்...

சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 24 மணிநேரத்தில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 9 நோயாளர்களும் யாழ்.போதனா வைத்தியசாலையில் 5 நோயாளர்களும் எலிக்காய்ச்சலுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணிநேரத்தில் இந்நோய் காரணமாக எந்தவொரு இறப்பும் ஏற்படவில்லை. இதுவரை யாழ்.மாவட்டத்தில் இந்நோய் காரணமாக 7 இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக பருத்தித்துறை, கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலே எலிக்காய்ச்சலை பரப்புகின்ற பற்றீரியா அந்த பிரதேசங்களில் இருக்கின்ற கால்நடைகளில் இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

எனவே அதனை உறுதிப்படுத்துமாறு நாங்கள் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்திடம் அனுமதி கோரியிருந்தோம். அதனடிப்படையில் இன்று கொழும்பில் இருந்து கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் ஒரு விசேட குழுவினர் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளனர்.

அந்தப் பிரதேசத்தில் இருக்கின்ற கால்நடைகளின் குருதி மாதிரிகளை பெற்று கொழும்புக்கு கொண்டு சென்று ஆய்வு செய்து, கால்நடைகளில் கிருமித் தொற்று இருக்கின்றதா என்பதை உறுதிப்படுத்த இருக்கின்றனர்.

99 நோயாளர்களில் இதுவரை 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் எவரும் இந்த நோயால் பாதிக்கப்படவில்லை.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஆண்கள் மருத்துவ விடுதியில் எங்களுக்கு ஒரு நெருக்கடியான நிலை காணப்பட்டது. அதிகமான நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். அதற்காக நாங்கள் தனியான விடுதி ஒன்றையும் நாங்கள் ஆரம்பித்துள்ளோம்.

எலிக்காய்ச்சல் நோய் வராமல் தடுப்பதற்காக தடுப்பு மருந்து வழங்கும் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. நேற்று முன் தினம் வரை ஏறத்தாழ 6000 பேருக்கு தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் காய்ச்சல் நோயாளர்களை இனங்காண்பதற்காக சுகாதாரப் பணியாளர்கள் வீடு வீடாகச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர் - என்றார். (அ-05)

## முள்ளிவாய்க்கால்...

தமது உறவுகளை இழந்த மக்கள் மன உளவியலிலே இயலாமையுடன் வாழ்ந்து வருகின்றனர். அந்த பேரவலத்தை நினைவு கூரவும், உயிரி ழந்த உறவுகளின் பெயர்களை வரலாற் றில் நிலைத்து நிறுத்தவும் முள்ளிவாய்க் காலில் ஓர் நினைவாலயம் கட்டப்பட வேண்டும்.

மேலும், உலகின் மூத்தகுடிகளில் ஒன்றான தமிழ் இனத்துக்கு இது போன்று நினைவு அமைப்பது அவசியம் என்றும், பேரவலத்தில் பலியானோரின் பெயர்கள் பொறிக்கப்பட்ட ஒரு நினைவு சின்னம் எமது இனத்தின் வரலாற்று அடையாளமாகவும், மீளமுடியாத துயரத்தின் சாட்சியாகவும் இருக்கும்.

இலங்கையின் பல பாகங்களில் ஆழிப்பேரலையில் உயிரிழந்த மக்களுக்கென நினைவுமண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளதைப் போல, முள்ளிவாய்க்கால் நினைவிடமும் எமது உறவுகளை நினைவுகூர வழிவகுக்கும். உயிரிழந்தோர் உறவுகள், சந்ததிகள் ஒவ்வொரு வருடமும் தம் நினைவுகளை வெளிப்படுத்தி ஆறுதலடைவதற்கு இது முக்கியம்.

இனப்பாகுபாடு பாராமல், முள்ளிவாய்க்காலில் நினைவாலயம் அமைப்பதற்கு அனுமதியளிக்க வேண்டும் - என்றார். (அ)

## முஸ்லிம்களின்...

குறிப்பிட்டார்.

இதேவேளை, சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க இந்த விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்டார்.

அவர் தெரிவிக்கையில்-

கொரோனா தொற்றினால் உயிரிழந்த முஸ்லிம்களின் சடலங்களை தகனம் செய்தமை தொடர்பிலான எமது அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்பது அனைவருக்கும் தெரியும். கடந்த அரசாங்கத்தின் அந்த செயற்பாட்டினை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

அரசியல் தேவைக்காக விஞ்ஞான ரீதியாக ஆராயாமல் அவ்வாறான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கு காரணமாக நபர்கள் மற்றும் அரச அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடனும் கலந்துரையாடி தகவல்களை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கிறோம் - என்றார். (அ)

## இரட்டை...

போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இந்திய விஜயம் பாரிய பேசுபொருளாக மாறியுள்ளது. மக்கள் விடுதலை முன்னணி இந்திய விரோத கொள்கையையே பின்பற்றி வந்தது. இதனை அனைவரும் நன்கு அறிவர். இத்தகைய பின்னணியில் பாரிய இந்திய விரோத கொள்கை உடைய தரப்பினர் எவ்வாறு இப்போது இந்தியாவுடன் இணைந்து செய்பட முன்வந்தனர் என்ற கேள்வி எழுகின்றது.

தேசிய மக்கள் சக்திக்கும் கூட இந்திய விரோத கொள்கையே காணப் பட்டது. நாம் எமது அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் பங்களிப்புடன் சில அபிவிருத்தி திட்டங்களை கொண்டு வர எத்தனித்த போது அவற்றுக்கு தேசிய மக்கள் சக்தியினர் எதிர்ப்பை வெளியிட்டனர். ஆனால் இப்போது காங்கேசன் துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தை இந்தியாவுடன் இணைந்து மேற்கொள்ளும் வகையிலான கலந்துரையாடலில் ஜனாதிபதி முன்னெடுத்திருந்தார். அதேபோன்று மேலும் பல விடயங்களை முன்னெடுக்கவுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியினர் தற்போது இரட்டை நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றமையே தற்போது புலப்படுகின்றது. ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் பொருட்டு இராஜ தந்திர ரீதியிலும் இரட்டை நிலைப்பாட்டுடனேயே தேசிய மக்கள் சக்தி செயற்பட்டுள்ளமை புலனாகின்றது - என்றார். (அ)

## அநுரவுக்கு...

இணைந்து ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தங்கள் இந்திய - இலங்கை ஒத்துழைப்பை மேலும் ஸ்திரப்படுத்தும் என ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான ஹைதராபாத் மாளிகையில் நடைபெற்றது.

இந்த உத்தியோகபூர்வ சந்திப்பின் போதே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இந்திய-இலங்கை தலைவர்கள் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டன.

இதனை வரவேற்கும் வகையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது அறிக்கை வெளியிட்டுள்ளார். (அ)

## புதிய...

பிரதிச் சபாநாயகர் ரிஸ்வி சாலியின் தலைமையில் கூடியது.

அரசியலமைப்பு மற்றும் நிலையியற் கட்டளைகளுக்கு அமைய முதலில் புதிய பாராளுமன்ற உறுப்பினர்களின் சத்திய பிரமாணம் இடம்பெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தியினால் பெயரிடப்பட்ட தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களில் மூவரும், புதிய ஜனநாயக முன்னணியினால் பெயரிடப்பட்ட தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் சத்திய பிரமாணம் செய்துகொண்டனர்.

புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதிச் சபாநயகர் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

தொடர்ந்து புதிய சபாநாயகரின் தெரிவு இடம்பெற்றது. தொடர்ந்து புதிய சபாநாயகருக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் வாழ்த்து தெரிவித்தனர். (அ)

## விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்றவர் மரணம்

யாழ்பாணம்,டிசெ.18

வீதியில் நடந்து சென்றபோது மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்துக்குள்ளாகிய நிலையில், யாழ். பாதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். குமாரபுரம், முள்ளியவளை பகுதியைச் சேர்ந்த கோவிந்தசாமி சிவானந்தன் (வயது 66) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

இவர் கடந்த 9ஆம் திகதி வேலைக்கு சென்றுவிட்டு இரவு 10 மணியளவில் வீடு நோக்கி சென்று கொண்டிருந்தார். ஊற்றம்பலப் பிள்ளையார் கோவிலடியில் அவர்மீது மோட்டார் சைக்கிள் மோதி காலில் படுகாயம் ஏற்பட்டது. இந்நிலையில் வீட்டுக்கு செல்ல முடியாத அவர் வீதி ஓரமாக படுத்திருந்தார்.

மறுநாள் காலை, அவ்வீதியால் வந்த ஒருவர் அவரை முச்சக்கர வண்டியில் ஏற்றிச்சென்று வீட்டில் சேர்த்துள்ளார். அதன்பின்னர் அவர் சிகிச்சைக்காக மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார். அன்றைய தினமே மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார். (05)

## புதிய எம்.பிக்கள்...

ரிஸ்வி ஷாலி தலைமையில் பாராளுமன்றம் நேற்று காலை கூடியது.

இதன்போது, புதிய ஜனநாயக முன்னணி கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக பைஸர் முஸ்தபா சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களாக, சுஜீவ சேனசிங்க, மனோ கணேசன், நிஸாம் காரியப்பர், இஸ்மாயில் மொஹம்மட் முத்து மொஹம்மட் ஆகியோர் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர். (அ)

## பிரித்தானிய...

2012 ஆம் ஆண்டு குற்றப்புலனாய்வு பிரிவினரால் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதுடன் அவருக்கெதிராக பயணத் தடையும் விதிக்கப்பட்டிருந்தது.

பிரித்தானிய பிரஜையான விஜயசுந்தரம் சங்கர் தனது தாயாரின் இறுதிச்சடங்கில் கலந்து கொள்வதற்காக கடந்த நவம்பர் மாதம் 30 ஆம் திகதி இலங்கை வருகை தந்தபோது கட்டுநாயக்க விமான நிலையத்தில் குற்ற புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கு நேற்று முன் தினம் கொழும்பு நீதவான் மன்றில் எடுத்தும் கொள்ளப்பட்டபோது சந்தேக நபர் சங்கர் சார்பில் ஆஜராகிய சரார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தனது வாதத்தில் இந்த சந்தேக நபரை கைது செய்தமை சட்ட ரீதியற்ற கைது என்றும் 2009 ஆண்டு யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் பல நூற்றுக் கணக்கான அப்பாவிகள் கைது செய்யப்பட்டபோது இந்த சந்தேக நபரும் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு இவர் மீது எந்தக் குற்றச்சாட்டும் சுமந்த முடியாத நிலையில் விடுதலை செய்யப்பட்டார்.

அதன் பின்னர் 2010 ஆம் ஆண்டு பிரித்தானியாவுக்கு பயணமாகிய பின்னர் பிரித்தானிய பிரஜாவுரிமையும் பெற்றுக்கொண்டார்.

பொலிஸார் 2012 இல் சந்தேக நபர் சங்கருக்கு எதிராக நிதி சேகரித்ததாக நீதிமன்றில் அறிக்கையை தாக்கல் செய்து விசாரணை செய்தபோதிலும் 2024 ஆம் ஆண்டு கைது செயப்படும் வரை இவருக்கெதிராக பொலிஸ் விசாரணையில் நீதிமன்றில் எவ்வித [illegible] முன்வைக்கப்படவில்லை என்பதோடு சந்தேக நபர் எந்த குற்றதை புரிந்தார் என்பதை நீதிமன்றில் தாக்கல் செய்த அறிக்கைகளில் பொலிஸார் தெளிவாக குறிப்பிடப்படவில்லை.

2010 ஆம் ஆண்டிலிருந்து 2024ஆம் ஆண்டு கைது செய்யப்படும் வரை சந்தேக நபர் இலங்கைக்கு எந்த விஜயமும் மேற்கொண்டிருக்கவில்லை என்பதை நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு வந்ததுடன் இவ்வாறான சட்டரீதியற்ற கைதுகளினால் புலப்பெயர் தமிழர்களின் வெளிநாட்டு முதலீடுகள் குறைவடைவதுடன் சுற்றுலாத்துறையிலும் பாரிய பாதிப்புகள் ஏட்படுவதுடன் இது இலங்கை பொருளாதாரத்தில் வீழ்ச்சியையும் ஏட்படுத்தும், என்பதனையும் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

கடந்த 06 ஆம் திகதி குற்றப்புலனாய்வு பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில் பிரித்தானிய பிரஜை நிதி சேகரித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார் என கூறப்பட்டது. ஆனால் விசாரணையில் தனது பெற்றோருக்கே அவர் நிதி அனுப்பியதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது. பெற்றோருக்கு நிதி அனுப்புவது குற்றமா என்ற வாதத்தையும் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா நீதிமன்றில் முன்வைத்ததை அடுத்து கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி சந்தேக நபரை விடுதலை செய்தார்.

இந்த வழக்கில் சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி தர்மஜா தர்மராஜா அனுசரணையில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா மற்றும் சட்டத்தரணி மொஹமட் மிஸ்பா , சட்டத்தரணி ஒஷதி கனீஷா ஹப்புஆராச்சி ஆஜராகியிருந்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் ஜனாதிபதிகளின் இராணுவ பாதுகாப்பு நீக்கம்!

### பொது பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 18

**முன்னாள் ஜனாதிபதிகளுக்கான பொலிஸாரின் பாதுகாப்பு தவிர்ந்த அனைத்து ஆயுதப்படைகளின் பாதுகாப்பும் எதிர்வரும் வாரத்தில் இருந்து நீக்கப்படவுள்ளதாக பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**

நேற்று பாராளுமன்றத்தில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

ஆறு மாதங்களுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு மதிப்பீட்டின் பின்னர் உரிய பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

மேலும், முன்னாள் ஜனாதிபதிகளுக்கென ஏனைய கடமைகளில் ஈடுபட்டுள்ள சில அதிகாரிகளும் நீக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

இது நடைமுறைப்படுத்தப்பட்டால், அரசாங்கம் இதுவரை செலவிட்ட பணத்தில் சுமார் 1200 மில்லியன் ரூபாவை சேமிக்க முடியும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# இலங்கை ஜனாதிபதியுடன் பேசி தமிழக மீனவர்களை விடுவிக்குக!

### ராகுல் காந்தி ஜெய்சங்கருக்கு கடிதம்

புதுடில்லி, டிசெ. 18

இலங்கை ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தி தமிழக மீனவர்களை விடுவிக்குமாறு கோரி இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு அந்த நாட்டு எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கடிதம் எழுதியுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில் ராகுல் காந்தி இந்த கடிதத்தை அனுப்பியுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, இந்தியாவின் டில்லிக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கை ஜனாதிபதியிடம் தமிழ் நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தவும் அவர் கோரியுள்ளார்.

அத்துடன், மீன்பிடி படகுகளையும் இலங்கை கடற்படை கைப்பற்றுவதால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும், குறித்த மீன்பிடி படகுகளை மீட்க இலங்கை ஜனாதிபதியிடம் வலியுறுத்த வேண்டும் எனவும் இந்திய எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட தமிழ் நாட்டு மீனவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள அபராதத்தை இரத்து செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி எழுதியுள்ள கடிதத்தில் கோரப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# இவ்வருடம் அதிக கடனை அரசாங்கம் பெறவில்லை!

### வெரிட்டே ரிசேர்ஜ் கூறுகிறது

கொழும்பு, டிசெ. 18

இந்த ஆண்டு வரவு - செலவு திட்ட வரம்புகளுக்கு மேல் அரசாங்கம் கடன் பெற்றுக்கொள்ளவில்லை என வெரிட்டே ரிசேர்ஜ் சமீபத்திய ஆய்வில் வெளிப்படுத்தியுள்ளது.

அதன்படி, அரசாங்கம் உள்ளூர் அளவில் பெற்றுக் கொள்ளும் மொத்த கடன் தொகை குறிப்பிடப்பட்டுள்ள வரம்பிற்குள் உள்ளதாக வெரிட்டே ரிசர்ச் கூறுகிறது.

இவ்வாண்டின் வரவு - செலவு திட்ட மதிப்பீடுகளுக்கு அரசாங்கம் நிர்ணயித்த வரம்பு 3,670 பில்லியன் ரூபாய் என நிதியமைச்சின் தரவு அறிக்கை தெரிவிப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் தொடக்கம் செப்ரெம்பர் மாதம் வரை அரசாங்கம் எடுத்த கடன் தொகை 1,903 பில்லியன் ரூபா என்றும் மேலும், 1,766 பில்லியன் ரூபாவை அரசாங்கம் கடனாகப் பெற முடியும் எனவும் வெரிட்டே ரிசர்ச் வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவித்துள்ளது.

குறித்த தரவுகளின்படி, 2024ஆம் ஆண்டில் வரம்புக்கு மேலதிகமாக கடன் பெறும் அபாயமான நிலையில் அரசாங்கம் இல்லை என வெரிட்டே ரிசர்ச் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மயிலத்தமடு பிரச்னைக்கு மிகவிரைவில் உரிய தீர்வு!

### பிரதி அமைச்சர் ரணசிங்க உறுதி

கொழும்பு, டிசெ. 18

மட்டக்களப்பு மயிலத்தமடு மக்கள் எதிர்நோக்கியுள்ள காணிப் பிரச்னைக்கு உரிய தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படும் என காணி மற்றும் நீர்ப்பாசனத்துறை பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் முன்வைத்த கேள்விக்கு பதில் வழங்கும்போதே பிரதி அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தப் பிரச்னை நீண்டகாலமாக இருந்து வருகிறது. உற்பத்தி அதிகரிப்பின் ஊடாக தேசிய பொருளாதாரத்துக்கு பங்களிப்பு வழங்குதல் என்ற எமது கொள்கையின் பிரகாரம் நாம் இந்த விடயத்தைப் பார்க்கிறோம்.

இது தொடர்பில் உரிய அரச நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன. இந்த விடயம் கடினமானதும் கவலையானதுமாகும். ஆதலால் மிகவும் அவதானமாக கையாள வேண்டியுள்ளது.

இந்தப் பிரச்னைக்கு உரிய தரப்புடன் கலந்துரையாடிய பின்னர் தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்படும் - என்றார். (அ)

# புதிய சபாநாயகர் ஜகத் சுயாதீனமாக நடப்பார்!

### சஜித் பிரேமதாஸ நம்பிக்கை

கொழும்பு, டிசெ. 18

புதிய சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன சுயாதீனமாக செயற்படுவார் என நம்புவதாக, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மீண்டும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு வழி வகுக்கும் வகையில் செயற்பட வேண்டாம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

பாராளுமன்றம் நேற்று கூடியபோது புதிய சபாநாயகராக ஜகத் விக்கிரமரத்ன பதவியேற்றிருந்தார். அதனை தொடந்து உரையாற்றியபோதே சஜித் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்றத்தின் மக்கள் பிரதிநிதிகளின் உரிமைகளை பாதுகாப்பதுடன், சட்ட மன்றத்தின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொண்டு, மக்களுக்கு மேலும் உகந்த சேவையை வழங்குவதில் சபாநாயகருக்கு தனித்துவமான வகிபங்கு உண்டு.

225 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தரமான அரச சேவையை வழங்குவதில் சபாநாயகரின் பாத்திரம் தனித்துவமானதாகும்.சகல உறுப்பினர்களினதும் கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் வேறுபாடின்றி செவிமடுப்பதன் ஊடாக ஜனநாயகத்தை வலுப்படுத்துவதில் முக்கிய பங்காளராகச் சபாநாயகர் மாறுகிறார்.

முன்னாள் சபாநாயகரைப் போன்று நடந்து கொள்ளாது பணியை சிறப்பாக முன்னெடுக்குமாறு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். முன்னாள் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பிக்க வேண்டிய தேவைப்பாடு ஏற்பட்டது.ஆனால் மீண்டும் அவ்வாறு ஏற்படாதவாறு நடந்து கொள்ளுமாறும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம் - என்றார்.

ஈழநாடு
Eelanadu

## ஜனாதிபதி அநுர புத்தகயாவின் மகாபோதி ஆலயத்துக்கு விஜயம்!





புதுடில்லி, டிசெ. 18

இந்தியாவுக்கு உத்தியோகப்பூர்வ சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று காலை பீகாரில் அமைந்துள்ள புகழ் பெற்ற புத்த கயாவின் மகாபோதி ஆலயத்துக்கு சென்றுள்ளார்.

பீகாரைச் சென்றடைந்த ஜனாதிபதியை, கயா விமான நிலையத்தில் வைத்து மூத்த அரசு அதிகாரிகள் வரவேற்றனர்.

அத்துடன், புத்த கயாவின் மகாபோதி ஆலய வளாகத்திற்குள் சென்ற ஜனாதிபதியை அநுரவை பௌத்த பிக்குகள் அன்புடன் வரவேற்றனர்.

யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியச் சின்னமாகவும் விளங்கும் மகாபோதி கோயில், புத்த மதத்தைப் பின்பற்றுபவர்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

புத்தர் ஞானம் பெற்றதாகக் கூறப்படும் இடத்தைக் குறிக்கும் வகையில், புத்த கயாவில் உள்ள ஒரு பழங்கால புத்த கோவில் இதுவாகும். (அ)

# தான்தோன்றித்தனமாக நடந்தது கோட்டா அரசு!

### எதிர்க் கட்சித் தலைவர் சாடல்



கொழும்பு, டிசெ. 18

கொவிட் காலத்தில் முஸ்லிம்களின் சடலங்கள் தகனம் செய்யப்பட்ட விவகாரத்தில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு இழப்பீட்டை வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று சபையில் வலியுறுத்தியுள்ளார்.

கொவிட் பரவல் காலத்தில் ஒரு இனத்தையும், மதத்தையும் இலக்கு வைத்து கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் தான்தோன்றித்தனமாக செயற்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

கோட்டாபய ராஜபக்ச அரசாங்கம் உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கிய வழிகாட்டுதல்களையும் மீறி செயற்பட்டது. உரிமைகள் மீறப்பட்ட இஸ்லாமிய சமூகத்தினருக்கும், பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கும் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தினார்.

இதனால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு இழப்பீட்டை வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் நேற்று பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.12.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org